வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.01.2024 திங்கட்கிழமை | இதழ் : 01 | பக்கங்கள் : 12

# பொருட்களின் விலைகள் புதுவருடத்தில் அதிகரிப்பு

**கைபேசிகள் 35 சதவீதத்தால்**
**தொலைபேசி கட்டணம் 3 வீதம்**
**சிற்றுண்டிகள் 10 ரூபாயால்**
**கொத்துரொட்டி 25 ரூபாயால்**

**கொழும்பு, ஜனவரி 01**

**பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிப்பால் 2024 புதுவருட தினமான இன்று முதல் பொருட்களின் விலைகள், சேவைகளுக்கான கட்டணங்கள் அதி கரித்துள்ளன.**

**தொலைபேசி கட்டணம்**

தொலைபேசி அழைப்பின் போது அறவிடப்படும் செஸ் வரி, தொலைத்தொடர்பு வரி, சமூக பாதுகாப்பு வரி உட்பட வரி உள்ளடங்கலாக வற் வரியுடன் தொலைத்தொடர்பு சேவைக்கான வரி 38. 4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 20.3 சதவீதமாக காணப்பட்ட இணைய சேவை வரி இன்று முதல் 23.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு அதனுடன் தொடர்புடைய சகல சேவைகளின் கட்டணமும் உயர்வடைகின்றன. இதேபோன்று தொலைக்காட்சி சேவைக் கட்டணங்களும் உயர்வடைகின்றன.

**போக்குவரத்து கட்டணம்**

18வீத வற்வரி அதிகரிப்பால் டீசல் விலை அதிகரித்தால் பேருந்து கட்டணத்தை உயர்த்த நேரும். 30 ரூபாயாக உள்ள குறைந்தபட்ச கட்டணத்தை 35 ரூபாயாக அதிகரிக்க வேண்டும். இதேபோல

11

# இசைவாணர் கண்ணனுக்கு 'சாதனை தமிழன்' விருது!

*யாழ்ப்பாணம், ஜன. 01*

'டான் தொலைக் காட்சி' குழுமம் வருடாந்தம் வழங்கும் சாதனை தமிழன் விருது இசைவாணர் கண்ணன் என்று அறியப்பட்ட முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது.

டான் தொலைக் காட்சி குழுமம் ஒவ்வோர் ஆண்டின் நிறைவிலும் டிசெம்பர் 31ஆம் திகதி '31 இன்னிசை

11



படம்: ஐ.சிவசாந்தன்

# தாய்நாட்டின் முன்னேற்றத்துக்காக அரப்பணிப்புடன் செயல்படுவோம்!

## புத்தாண்டு வாழ்த்து செய்தியில் ஜனாதிபதி

*கொழும்பு, ஜன. 01*

நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புகளை அறிந்து கொள்வோம். அவற்றை செயல்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம். அதற்காக பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக்கொள்வோம் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், "பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியிலேயே

11

# செபம் என்ற ஆயுதத்தின் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு காண்போம்!

## புத்தாண்டு வாழ்த்து செய்தியில் யாழ். ஆயர்

*யாழ்ப்பாணம், ஜன. 01*

செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியும். உலகில் முடியாதது எனக் கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவு காண முடியும் - இவ்வாறு யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரி



வித்துள்ளார்.

2024 புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார். அங்கு அவர்,:

2024ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இந்தப் புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர்மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

2023ஆவது ஆண்டு பல

11




**வாசகர்கள், முகவர்கள் விளம்பரதாரர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# மக்களின் அர்ப்பணிப்பின்றி நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

*கொழும்பு, ஜன. 01*

நாட்டை கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்களாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாகும். எனவே, அவ்வாறான மோசடிக்காரர்களான அரசியல்வாதிகளிடமிருந்து ஆட்சியை பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்படாவிட்டால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆட்சியாளர்களாலேயே நாடு இன்று இவ்வாறான நிலையில் உள்ளது. அந்த வழியில் வந்தவர்களே இன்றும் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எனவே, அவர்களது ஆட்சியின் கீழ் குறுகிய காலத்துக்குள் இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்று மக்கள் எதிர்பார்க்கக்கூடாது.

எனவே மோசடிக்காரர்களான

11



# டான் தொலைக்காட்சி குழுமத்தால் கில்மிஷா, அசானிக்கு கௌரவம்!

*யாழ்ப்பாணம், ஜன. 01*

இசையின் மூலம் பிரபலம் பெற்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த கில்மிஷா உதயசீலன், மலையகத்தை சேர்ந்த அசானி கனகராஜ் ஆகியோர் டான் தொலைக்காட்சி குழுமத்தால் நேற்றைய தினம் கௌரவிக்கப்பட்டனர்.

அண்மையில், இந்தியாவின் பிரபல ஊடக நிறுவனம் நடத்திய இசைப் போட்டி நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறுமியான கில்மிஷா

11

# மதமாற்ற, பசுவதை சட்டங்களை பாராளுமன்றில் இயற்ற வேண்டும்

## ஜனாதிபதிக்கு மகஜர் அளிக்க சைவ அமைப்புகள் தீர்மானம்!

*யாழ்ப்பாணம், ஜன. 01*

அரசமைப்பில் இந்து மதத்துக்கு முன்னுரிமை மற்றும் மத மாற்ற தடை சட்டம், பசு வதை தடுப்பு சட்டங்களை பாராளுமன்றில் இயற்ற வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தி வடக்கின் சைவ அமைப்புகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றை கையளிக்கத் தீர்மானித்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் சைவ அமைப்புகள் எதிர்நோக்கும் சமய ரீதியான பிரச்னைகள் தொடர்பான ஆலோசனை கலந்துரையாடல் நேற்று நல்லை ஆதீனத்தில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் எதிர்வரும் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மகஜர் ஒன்றை கையளிக்க சைவ அமைப்புகள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன என்று ஈழம்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஈழத்தழிழர் பிரச்னைகளில் தமிழகத்தின் பார்வை அல்லது புரிதல் எப்படிப் பட்டது என்பதை சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அது நமது பகவான் சிங்குக்கும் பொருத்தமானதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நேற்று பத்திரிகை அச்சுக்கு போவதற்கு முன்னதாக 'ஈழநாடு' பக்க வடிவமைப்பாளர் ராஜேந்திரா தொலைபேசியில் அழைத்தார். அவர் பல தசாப்தங்களாக - பல பத்திரிகைகளில் பக்க வடிவமைப்பாளராக பணியாற்றினாலும் ஓர் ஆசிரியருக்கு வேண்டிய தகைமையை  கொண்டிருப்பவர் என்பதை பல தடவைகளில் அவதானித்திருக்கின்றேன்.

அவர் சொன்னார், 'இந்த இமாலய பிரகடனம் பற்றி பகவான் சிங் இந்த வாரம் எழுதியிருக்கிறார். ஆனால் அவரது கருத்து உங்கள் கருத்துடன் முரண்படுகின்றது. அதனை கொஞ்சம் பார்த்து சொல்லுங்கள்.' என்றார்.

ஆசிரியர் பார்த்து அனுப்பிய பின்னரும் அவர் அதில் கவனம் கொண்டிருப்பது அவரின் பொறுப்பை உணர வைத்தது. ஈழநாடு மாத்திரமன்றி, எமது டான் குழுமத்திலும் வெளிவருகின்ற - அல்லது ஒளிபரப்பாகின்ற எல்லா விடயங்களும் குழுமத்தின் கருத்தோடு ஒத்துப்போவதில்லை. அதிகம் ஏன், அருந்தவபாலன், தனபாலசிங்கம் போன்றவர்கள் எழுதுகின்ற எல்லா விடயங்களும் ஒத்துப்போகாதவை என்றாலும்கூட, நாம் அதில் 'கை' வைப்பதில்லை. அவரவர் கருத்துகளை அப்படியே தந்துவிடுகின்றோம். பகவான் சிங்கின் கருத்தும் அதுபோன்றது தான் என்பதை அவருக்கு சொல்லி, அதனை அப்படியே வெளியிட சொன்னோம்.

அந்தக் கட்டுரை வெளிவந்த பத்திரிகையை உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரன் தனது நண்பர்களுக்கு பகிர்ந்துகொண்டிருந்ததை நேற்று அதிகாலையே பார்க்க முடிந்தது. அது அவரிடமிருந்து ஊர்க்குருவிக்கும் வந்திருந்தது. பக்கம் 7, 14ஐ பார்க்கவும் என்ற குறிப்புடன். அந்த பக்கங்களில்தான் பகவான்சிங்கின் கட்டுரை வெளிவந்திருந்தது. அதிலிருந்து ஒரு விடயத்தை அறியமுடிந்தது. அதாவது அவரின் கருத்துடன் சுரேன் ஒத்துப்போகிறார் என்பதை.

முதலாவது விடயம், இந்த முழு நகர்வின் பின்னாலும் வேறு ஒருவர் இருக்கிறார் என்றே நாங்கள் இதுவரை பூடகமாகத் தெரிவித்து வந்தோம். ஆனால், அது வேறுயாருமல்ல நமது தமிழரசு பேச்சாளர் ம. ஆ. சுமந்திரன் தான் என்பதை பகவான் சிங் அழுத்தமாக சொல்லியிருந்தார். அதனையும் சுரேன் ஏற்றுக்கொண்டதாகவே தெரிகின்றது. இல்லையென்றால் அதனை பகிர்கின்றபோது அதுபற்றி குறிப்பிட்டிருப்பார் அல்லவா?

அதைவிட, இரண்டு விடயங்களை பகவான் சிங் கேள்விக்கு உட்படுத்திவிட்டு அவற்றுக்கான பதில்களை சுரேனிடமிருந்து பெற்று எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையை படிக்கத் தொடங்கியபோதே, சுரேன் தனது பிரகடனத்தை 'மார்க்கெற்' பண்ணுவதற்கு பகீரத பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார் என்பதையும் அதற்காகவே அவர் பகவான்சிங்கிடமும் பல தடவை பேசியிருக்கிறார் என்பதும் அதன் விளைவுதான் இந்தக் கட்டுரை என்பதையும்கூட உணரமுடிந்தது.

பகவான் சிங் கேள்விக்கு உட்படுத்திய முதலாவது விடயம் ஏன் இந்த விடயத்தை இரகசியமாக செய்தீர்கள் என்பது. அதற்கு சுரேன் பதிலளித்திருப்பதை பகவான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

'முதலில், இந்தப் பிரகடனம் இரகசியமாக செய்யப்பட்டதால் ஏற்பட்ட சந்தேகங்கள். சுயநலவாதிகளால் இந்த முயற்சி முறியடிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இரகசியம் காக்கப்பட்டதாக சுரேன் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். நான் உங்கள் கருத்துடன் முற்றிலும் ஒத்துப்போகிறேன்,' என்கிறார் பகவான்.

பிரகடனம் இரகசியமாக செய்யப்பட்டதில் அவர் கூறும் காரணங்களை வேண்டுமானால் பகவான் ஒத்துப்போகலாம். ஆனால், அது பிரகடனத்தை தயாரிக்கும்வரைதான் அவசியமானது. ஆனால், பிரகடனத்தை தயாரித்த பின்னரும் எட்டு மாதங்கள் அதனை 'குளிர் சாதனப்பெட்டியில்' பாதுகாப்பாக வைத்திருந்தது எதற்காக? அது இப்போது வெளியிடப்பட்டது ஏன்? என்பதற்கும் அல்லவா பதில் சொல்லியிருக்க வேண்டும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றியோ அல்லது தேர்தல் நடக்குமா என்பது பற்றியோ அறிவிப்பதில் ரணில் விக்கிரமசிங்க காலம் தாழ்த்தி வந்ததையும் அவர் இப்போதுதான் அதற்கு தயாராகி வருவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அது சரி, அந்த இமாலய பிரகடனத்தில் நடிகர்கள் பலர் நடித்திருந்தாலும் அதனை இயக்கியவர் நமது சுமந்திரன் தான் என்ற பகவானின் கருத்தை சுரேன் ஏற்றுக்கொண்டிருக்கின்றபோது, எதற்காக அதற்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று மட்டுமல்லாமல் அதற்கும் ரணிலுக்கும்கூட எந்த சம்பந்தமும் இல்லை என்று சுமந்திரன் சொன்னார் என்பது தெரிவில்லை.

சிலவேளை இந்த முயற்சி சரிவரப் போவதில்லை என்பதை வழக்கம்போல தனது முயற்சிகள் எல்லாமே தோல்வியில் முடிந்ததுபோலத்தான் இதுவும் முடியப்போகின்றது என்பதைத் தெரிந்துகொண்டதால்தான் அவர் முந்திக்கொண்டாரோ தெரியவில்லை.

இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டதால் ரணில் எந்த வகையில் இலாபம் அடைந்தார் என்பதையும் இந்தப் பத்தியில் முன்னர் ஒருதடவை எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இன்று மேற்குலகின் தெரிவாக இருப்பவர் ரணில்தான் என்பதும் அவரை எப்படியும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி கதிரையில் அமர்த்திவிடவேண்டும் என்பதிலும் மேற்குலகு திட்டமிட்டு வருவதையும் அண்மைக்கால சம்பவங்கள் உணர்த்தியிருக்கின்றன.

இந்த நிலையில் மேற்கின் தூதரகம் ஒன்றின் ஏற்பாட்டில் செய்துகொண்ட இந்தப் பிரகடனத்தை தூதரகங்கள் வரவேற்றிருப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

ஆனால், அதுகூட நமது பகவானுக்கு மகிழ்ச்சிக்கு உரியதாக இருப்பது அவரின் ஈழத்தமிழர் பிரச்னை பற்றிய ஆழ அகலத்தை அவர் எவ்வளவு தூரம் அறிந்துவைத்திருக்கிறார் என்பதில் கேள்வியை ஏற்படுத்துகிறது.

இதைவிட முக்கியமானது அவர் அந்தக் கட்டுரையில் தெரிவித்திருக்கின்ற இன்னுமொரு விடயம்.

''தேசிய உரையாடல்' ஜனவரியில் துவங்கும் என்றும் இதன் மூலமாக, போர்க் குற்றங்கள் விசாரணை, அதிகாரப் பகிர்வு, மற்றும் இலங்கைக்கான புதிய அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட அனைத்துத் தேசிய பிரச்னைகளுக்கும் தீர்வு எட்டப்படும் என்றும் சுரேன் கூறுகிறார்.' என்கிறார் பகவான்.

அதுபற்றி எழுதுவதெனில் இந்தப் பத்தி போதுமானதாக இருக்காது என்பதால் அதுபற்றி நாளை பார்ப்போம்.

அனைவருக்கும் இந்த ஊர்க்குருவியின் புத்தாண்டு வாழ்த்துகள்.

**- ஊர்க்குருவி.**

## சாதனைத் தமிழன் விருது வழங்கும் நிகழ்வு 2023



படங்கள் : ஐ.சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu
01.01.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 2024

“நாள் செல்லும் செல்லும் நாம் எங்கு செல்வோமா”, என்றொரு கூற்றுண்டு. இது ஈழத் தமிழ் சமூகத்தின் அரசியல் இயங்கு நிலைக்கு அச்சொட்டாகப் பொருந்திப் போகும் ஒன்று. 2023இன் ஆரம்பத்தில் ‘ஈழநாடு’ குறிப்பிட்ட விடயங்களை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலை - இருப்பதையும் இழந்து விடுவோமோ என்னும் அச்சத்தில் நமது நாட்கள் நகர்கின்றது என்றால் நாங்கள் சரியான பாதையில் செல்லவில்லை - எங்களுடைய அரசியலை வழிநடத்தும் தலைவர்கள் என்போர் மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கவில்லை என்பதே பொருளாகும்.

2023இல் இடம்பெற்ற ஒரேயொரு முக்கியமான அரசியல் நிகழ்வு ஒன்றை குறிப்பிட முடியுமென்றால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவு மட்டும்தான். 20 வருடங்களுக்கும் மேலாக ஓர் அரசியல் கூட்டாக இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி வெளியேறியது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் நமது தமிழ்த் தேசிய அரசியல் மேலும் சிதைவை நோக்கியே சென்றிருக்கின்றது. மேலும் பின்னடைவு.

இலங்கை பொருளாதார ரீதியாக மீண்டெழுவதற்கான பாதையில் பயணிப்பதாக கூறப்படும் நிலையில்கூட, அரசியல் மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தாத ஆண்டாகவே 2023 கழிந்திருக்கின்றது. ஆனால், பிறிதொரு வரலாற்று உண்மையையும் 2023 பதிவு செய்திருக்கின்றது. அதாவது, இலங்கைத் தீவு இவ்வாறானதொரு வங்குரோத்து நிலைக்குள் வீழ்ந்த போதிலும்கூட தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு நியாயமானதொரு தீர்வைக் காண வேண்டும் என்னும் புரிதல் தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் மத்தியில் ஏற்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியபோது அதற்கு எதிராக எவ்வாறான குரல்கள் எழுந்தன என்பதையும் கடந்த ஆண்டு பதிவு செய்திருக்கின்றது.

இந்த அனுபவத்தின் பின்னணியில் நோக்கினால் தமிழ்த் தலைமைகள் என்போரின் புத்திசாலித்தனமான - அதேவேளை, கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் உபாயங்களின் அடிப்படையில் செயல்படுவதன் மூலம் மட்டுமே தமிழ் மக்களின் அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் முன்னேற்றங்களை காணலாம்.

யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதி ஓர் உண்மையை தெட்டத்தெளிவாகப் பதிவு செய்திருக்கின்றது. அதாவது, சர்வதேச அழுத்தங்கள் தீர்வைக் கொண்டுவரும் என்னும் நம்பிக்கையில் தொடர்ந்தும் காலத்தை விரயம் செய்ய முடியாது - செய்யவும்கூடாது. அதற்காக அந்த அழுத்தங்கள் தேவையற்றவை என்பதல்ல மாறாக, அவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் சாத்தியமான அனைத்து வழிகளிலும் படிப்படியாக முன்னகரும் உத்திகள் தொடர்பிலேயே தமிழர் தரப்பு சிந்திக்க வேண்டும். அதற்கான ஐக்கியமான செயல்பாடுகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இந்த ஆண்டில் இந்த அடிப்படையில் முன்னேறுவதற்கான முயற்சிகள் தொடர்பில் தமிழர் தரப்புகள் சிந்திக்கவும் - செயல்படவும் வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் ஆரம்பிக்கின்றபோதும் இதையே சுட்டிக்காட்டும் நிலைமை இருக்குமாயின் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு மேலும் சிதைவடைத்து - தமிழ்த் தேசியம் என்பது வெறும் விவாதப்பொருளாக சுருங்கிப்போகும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஓரிரவில் முடிந்து போகும் விடயங்கள் அல்ல. கடந்த 14 ஆண்டுகால அனுபவங்கள் இதனை நமக்கு தெட்டத்தெளிவாக நிரூபித்திருக்கின்றது. இந்த ஆண்டு தேர்தல்களுக்கான ஆண்டாக இருப்பதால், அதனை எவ்வாறு கையாள்வது என்று தமிழ்த் தரப்புகள் சிந்திக்க வேண்டும். அதுவே, முதல் அரசியல் பணியாகும்.

# யாழ். மாநகர சபையின் பவள விழா நிகழ்வுகள்!

*யாழ்ப்பாணம், ஜன. 01*

யாழ். மாநகர சபையின் பவள விழா, மாநகர சபை தினம் மற்றும் 2024 அம் ஆண்டுக்கான கடமை செயல்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை யாழ். மாநகர சபை முன்றலில் காலை 9.00 மணிக்கு கொண்டாடப்படுகிறது.

யாழ். மாநகர சபையின் 75ஆவது ஆண்டு நிறைவு தினமான இன்று யாழ். மாநகர சபையால் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, யாழ். மாநகர சபையில் பணியாற்றிய முன்னாள் முதல்வர்கள், முன்னாள் ஆணையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர், யாழ். மாநகர சபையால் ஆற்றப்படும் சேவைகளை விசேடமாக பெறக்கூடிய விசேட நடமாடும் சேவை ஒன்றும் மாநகர சபை பணிமனையின் முன்னரங்க பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் சோலைவரி. நீர் வேலைப் பகுதி, நானாவித இறை வரிப் பகுதி, பொதுச்சுகாதார பொறியியல் பிரிவு தொடர்பான சேவைகளை பொது மக்கள் விசேடமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுமக்கள் இலவசமாக பார்வையிடுவதற்கு ஏற்ற வகையில் சங்கிலியன் பூங்காவானது திறந்து வைக்கப்படுகின்றது, அரியாலை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் இணைந்து விசேட மருத்துவ முகாம் ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மாநகர சபை ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஆதி நரசிம்ம வைரவர் ஆலயத்திலும் தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலும் காலை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. வரும் புதன்கிழமை 3 ஆம் திகதி பவளவிழாவை முன்னிட்டு ஏனைய மத வழிபாட்டு தலங்களில் விசேட பூசை, வழிபாடுகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

(ஐ)

# இருவரை தாக்கி நகை, பணம் கொள்ளை; பொலிஸ் அதிகாரி உட்பட நால்வர் கைது!

*கொழும்பு, ஜன. 01*

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை தாக்கி தங்க நகைகள், பணத்தை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, இரு கார்களில் வந்த சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி இரு இளைஞர்களை தாக்கி தங்க நகைகள், பணத்தை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ள நிலையில், நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# அச்சுவேலியில் டெங்கு பரவல்; புகையூட்டல் செயல் முன்னெடுப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 01*

அச்சுவேலியில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ள நிலையில் புகையூட்டும் செயல்பாடு நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டது.

கோப்பாய் பொது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட அச்சுவேலியில் அண்மைக்காலமாக டெங்கு நோய் பரவல் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் பொது சுகாதார பரிசோதகர்களால் வீட்டுத் தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது.




இந்த நிலையில், அச்சுவேலியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் புகையூட்டப்பட்டன.

கடந்த தினங்களில் கோப்பாய் பொது மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய் தாக்கத்தால் உயிரிழப்புகள் பதிவாகி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம், வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**

துணிச்சலாக சில ம்க்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**விருட்சிகம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# இலங்கை அகதிகளுக்கு விரைவில் இந்திய குடியுரிமை!

## அண்ணாமலை நம்பிக்கை

சென்னை, ஜன. 01

"இலங்கையிலிருந்து வந்து முகாம்களில் தங்கியிருக்கும் போது பிறந்தவர்கள் மற்றும் தீவிர குற்றப் பின்னணி இல்லாதவர்கள் ஆகியோருக்கு இந்திய குடியுரிமை வழங்குவது குறித்து மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது" என்று, அண்ணாமலை கூறினார்.

இந்திய வம்சாவழி தமிழர்கள், இலங்கையில் குடியேறி 200 ஆண்டுகளாவதை குறிக்கும் வகையில், டில்லியில் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

முத்திரையை பா. ஜ. க தலைவர் ஜே. பி.நட்டா வெளியிட, இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் தொண்டமான் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில்,

மத்திய இணையமைச்சர் எல். முருகன், பா. ஜ. கவின் வெளிநாட்டு விவகாரங்கள் பிரிவு பொறுப்பாளர் விஜய், தமிழக சட்டசபை பா.ஜ. க. தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட பலர், பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பேசிய பா. ஜ. க. தமிழக தலைவர்,

இலங்கையிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில், தமிழத்துக்கு வந்த 5 முதல் 6 இலட்சம் எண்ணிக்கையிலான தமிழர்களுக்கு முறையான தங்குமிடம் செய்து கொடுக்கப்படும் என்பது உள்ளிட்ட, நிறைய வாக்குறுதிகள் தரப்பட்டன. அவை மேலும் சிறப்பாக, நிறைவேற்றப்பட வேண்டும்.

தவிர, வெவ்வேறு காலகட்டங்களில், இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்திய வம்சாவழி தமிழர்கள் பலர், இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். அவர்களில் பலரும் இங்கு குடியுரிமை இல்லாமல் இருந்து வருகின்றனர்.

இவர்களில், சட்டத்தை மீறி சிலர் இங்கு வந்துள்ளனர். அப்படி வந்தவர்களில் இங்கு குழந்தை பெற்றவர்களும் உள்ளனர்.

இன்னும் சிலருக்கோ, இலங்கையிலும் வழக்குகள் இல்லை, இங்கும் இல்லை. இருந்த போதும், அவர்களுக்கு குடியுரிமை இல்லாமல் இருக்கிறது. அதனால், அப்படிப்பட்டவர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை உள்ளது.

இதையடுத்து, தமிழக முகாம்களில் பிறந்தவர்களுக்கும், தீவிரமான குற்றப்பின்னணி இல்லாதவர்களுக்கு குடியரிமை வழங்குவது. விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம். இதற்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

(ஐ)

# விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை, மண்டபம் அமைக்க வேண்டும்!

## பிரேமலதா விஜயகாந்த் கோரிக்கை

சென்னை, ஜன. 01

மறைந்த தே. மு. தி. க. நிறுவுநர் தலைவரும் நடிகருமான விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தே. மு. தி. க. பொதுச் செயலாளரும் விஜயகாந்தின் மனைவியுமான பிரேமலதா கோரிக்கை விடுத்துள்ளார்.

கோயம்பேடு கட்சி பணிமனையில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று மரியாதை செலுத்திய பிரேமலதா, "விஜயகாந்தின் நினைவிடத்தில் தினம்தோறும் பூசைகள், அலங்காரங்கள் செய்யப்படும். பொது மக்கள் யார் வேண்டுமானாலும் வந்து அஞ்சலி செலுத்தலாம்.

இறுதி ஊர்வலத்தில் மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்த தமிழக அரசுக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கும், ஆளுநர் ரவிக்கும், ஆளுநர் தமிழிசைக்கும், அனைத்து கட்சி தலைவர்களுக்கும், திரையுலகை சேர்ந்தவர்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இதேபோல் நேரிலும், தொலைபேசி வழியாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் தலைவணங்கி நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை மற்றும் மணி மண்டபம் அமைக்க வேண்டும் என தமிழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். தமிழக அரசு நிச்சயம் செய்துகொடுக்கும் என்று நம்புகிறோம்" என்றார்.

(ஐ)

# சட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் ஆளுநர் - முதல்வர் சந்தித்து பேச்சு

சென்னை, ஜன. 01

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரம் தொடர்பாக தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை, முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்துப் பேசினார்.

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆளுநர் ரவி நிலுவையில் வைத்துள்ளார் என்றும் அவற்றுக்கு ஒப்புதல் அளிக்க கால வரம்பு நிர்ணயம் செய்யக் கோரியும் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதிபதிகள் இந்த விவகாரம் தொடர்பாக ஆளுநர் ரவி, முதல்வர் ஸ்டாலினை நேரில் அழைத்துப் பேசுமாறு அறிவுறுத்தினர்.

அதனடிப்படையில், ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலினுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்று, முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் ரகுபதி, துரைமுருகன், தங்கம் தென்னரசு, ராஜ கண்ணப்பன் ஆகியோர் நேற்று முன்தினம் ஆளுநர் மாளிகைக்குச் சென்றனர். ஆளுநர் ரவி, முதல்வர் ஸ்டாலினை வரவேற்று, தனது அறைக்கு அழைத்துச் சென்றார். இந்த சந்திப்பு மாலை 5.30 முதல் 6.00 மணி வரை நடைபெற்றது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பவை வருமாறு,

ஆளுநருடனான சந்திப்பில், சட்டப்பேரவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த 10 முக்கிய சட்டத் தீர்மானங்களை அரசியல் சாசனத்தில் குறிப்பிடாத வகையில், தேவையின்றி குடியரசுத் தலைவருக்கு ஆளுநர்அனுப்பி வைத்துள்ளதைத் திரும்பப் பெற்று, அவற்றுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

பொதுவாக, அரசியல் சாசன விதிகளுக்கு உட்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும். அப்போதுதான், மாநில மக்களின் நலனுக்கும், நிர்வாகத்துக்கும் பயனளிக்கும் என்று முதல்வர், ஆளுநரிடம் எடுத்துரைத்தார்.

இதுதவிர, ஆளுநருக்கு முதல்வர் அளித்த கடிதத்தில், அரசியல் சாசனத்தின்படி அமைக்கப்பட்டுள்ள உயர் அமைப்புகளின்மீது தான் உயர்ந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பதாகவும், மாநில நிர்வாகம் மற்றும் மக்களின் நலன் கருதியும், நிலுவை மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து தீர்வு காணும் நோக்குடனேயே தான் செயல்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ)

# பழுதடைந்த விதை உருளைகிழங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு!

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

யாழ்ப்பாணம், ஜன. 01

**குப்பிழானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

அண்மையில் வழங்கப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் ஒருவகை ஒரு வகை பற்றீரியா தாக்கத்துக்கு உள்ளான நிலையில் இது குறித்த ஆய்வறிக்கையை அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்த விவகாரம் தொடர்பில், தரகு பணம் கைமாற்றப்பட்டமைக்கான சாத்திய கூறுகள் தென்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்காக சுமார் 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டன.



மேலும் குறித்த விடயத்தில், தவறு செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேநேரம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)



# புத்தூரில் வீடொன்றின்மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 01

புத்தூர் கிழக்கில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் குறித்த வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதலில் குறித்த வீட்டின் முன்பகுதி சேதமடைந்தது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கணவனின் கத்தி குத்தில் மனைவி படுகாயம்!

கிளிநொச்சி, ஜன. 01

கணவன் கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்த நிலையில் பெண்ணொருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் பூநகரி - வலைப்பாட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

போதையில் இருந்த கணவன் மனைவியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதன்போது, மனைவியை அவர் கத்தியால் தலையிலும் கழுத்திலும் குத்தியும் வெட்டியும் காயப்படுத்தியுள்ளார்.

பெண்ணை கணவரிடமிருந்து காப்பாற்றிய அயலவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.(ஐ)

# சுன்னாகம் பஸ் நிலையத்தில் கசிப்புடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 01

சுன்னாகம் பேருந்து நிலையத்தில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 7.5 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கைதானவர் ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஆவார்.

சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புத்தாண்டை அவதானமாக மக்கள் கொண்டாட வேண்டும்!

கொழும்பு, ஜன. 01

புத்தாண்டை அவதானத்துடன் கொண்டாடுமாறு சுகாதார திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

புத்தாண்டு தினத்தில் பட்டாசு வெடிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்க்க வேண்டும்.

இதேபோன்று, குடிபோதையில் வாகனம் ஓட்டுவதை தவிர்ப்பதன் மூலம் ஏற்படும் விபத்துகள் மற்றும் பாதிப்புகளை தவிர்க்க முடியும் என்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் முல்லை. இளைஞர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 01

புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது, 15 மில்லிக்கிராம் கொண்ட 8 சுருள் ஐஸ் போதைப்பொருள் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியானவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில், புதுக்குடியிருப்பை சேர்ந்த 22 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# காபநீரொட்சைட் செலுத்தப்பட்டு உயிரிழப்பு இடம்பெறவில்லை!

## இலங்கை தாதியர் சங்கம் மறுப்பு அறிக்கை

கொழும்பு, ஜன. 01

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சத்திர சிகிச்சையின் போது ஒட்சிசனுக்குப் பதிலாக காபநீரொட்சைட்டை செலுத்தி பெண் ஒருவர் உயிரிழந்தார் என்ற குற்றச்சாட்டை மறுப்பதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மார்பக புற்றுநோய் சத்திர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நுகேகொடை பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடைய பெண் ஒருவரே வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். அவருக்கு, ஒட்சிசனுக்குப் பதிலாக காபநீரொட்சைட் தவறுதலாக கொடுக்கப்பட்டதாக சுகாதாரத் தொழில் சங்கங்கள் குற்றம் சுமத்தின.

எவ்வாறாயினும், வெள்ளிக்கிழமை இரவு சத்திரசிகிச்சையின்போது குறித்த பெண் உயிரிழந்தார் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்த மரணம் தொடர்பில் விசாரணை நடத்தி எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண கொழும்பு தேசிய மருத்துவமனையின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சத்திரசிகிச்சையின் போது ஒட்சிசனுக்குப் பதிலாக காபநீரொட்சைட் செலுத்தியதாலேயே பெண் உயிரிழந்தார் என்ற குற்றச்சாட்டை அகில இலங்கை தாதியர் சங்கம் இன்று மறுத்துள்ளது. (ஐ)

# தனியார் பாடசாலைகளில் பெருந்தொகை பணம் அறவிடுவதை தடுக்க நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 01

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு பெருந்தொகைப் பணம் அறவிடப்படுவதை நிறுத்துவதற்கு கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றது. அமைச்சின் புதிய செயலாளராக வசந்த பெரேரா நியமிக்கப்படவுள்ள நிலையில், இது தொடர்பில் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எண். 61 8- பாடசாலைகள் மற்றும் தொழில்கல்லூரிகள் சட்டம், அரசு அங்கீகரித்த தனியார் பாடசாலைகளில் சேரும் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க முடியாது. அந்தப் பாடசாலைகளில் உள்ள ஆறாயிரம் ஆசிரியர்களுக்கு அரசு ஆண்டுதோறும் 253 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கிறது,

மேலும் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளையும் இலவசமாக வழங்கப்படுகின்றது. இருந்த போதிலும், அந்தப் பாடசாலைகளில் சேரும் மாணவர்களிடம் நியாயமற்ற கட்டணம் வசூலிப்பது குறித்து அமைச்சகத்துக்கும் அவ்வப்போது முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

இதற்கிடையில், கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெறும் ஆசிரியர்களை தங்கள் பாடசாலைகளுக்கு உள்வாங்கும் திட்டத்தை தனியார் பாடசாலைகள் தொடங்கியுள்ளன.

கல்லூரி பயிற்சிக்கு பிறகு, அந்த ஆசிரியர்கள் அரச பாடசாலைகளில் பணிபுரிவது கட்டாயம், அவ்வாறு செய்யாமல் ஒப்பந்தத்தை மீறினால், 35 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டும்.

இந்தத் தொகையை ஏழு இலட்சம் ரூபாயாக அதிகரிப்பது தொடர்பில் அமைச்சில் கலந்துரையாடப்பட்ட போதிலும், இதுவரையில் உறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. (ஐ)

# கைபேசிகளின் விலைகளும் இன்று முதல் அதிகரிக்கின்றன

கொழும்பு, ஜன. 01

இன்று திங்கட்கிழமை முதல் அனைத்துவகை கைபேசிகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று கைபேசிகள் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் சமித் செனரத் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

திங்கட்கிழமை முதல் கைபேசி ஒன்றின் விலை சுமார் 35 வீதத்தால் அதிகரிக்கப்படும். வற் வரி 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறினார்.

இந்த விலை உயர்வின் மூலம் சந்தையில் கைபேசிகளின் விற்பனை சுமார் 50 வீதம் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாதாள உலகக்குழு, குற்றவாளிகளுக்கு 2,000 அதிகாரிகள் ஆதரவளிக்கின்றனர்!

## புலனாய்வு திணைக்களம் அறிக்கை

கொழும்பு, ஜன. 01

**புலனாய்வு திணைக்களத்தால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட அறிக்கையின்படி, பாதாள உலகக் குழுவினர் மற்றும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் என சுமார் இரண்டாயிரம் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்த நிலைமை மாற்றப்படும் வரை பாதாள உலகக் குழுவை ஒடுக்குவது கடினமாகும். தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளிகளை விடுதலை செய்வதற்கு பல்வேறு நிலைகளில் உள்ள அரசியல்வாதிகள் பொலிஸ் திணைக்களத்தில் தலையீடுகளை செய்து வருகின்றனர் என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

சில அரசியல்வாதிகளுடன் பாதாள உலகக் குழுவினர் தொடர்பில் இருக்கின்றனர். அந்த அரசியல்வாதிகளிடமிருந்து இவர்களுக்கு உயர் பாதுகாப்பு கிடைப்பதை அறிய முடிகிறது என்றும் புலனாய்வு பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 2024இல் கொழும்பை சுற்றிலும் 10,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜன. 01

2024 ஆம் ஆண்டில் கொழும்பை சுற்றி 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் மக்களை மீள் குடியேற்றுவதற்காக கிட்டத் தட்ட 6,500 வீடுகள் நிர்மா ணிக்கப்படும். இதில் 11 வீட்டுத் திட்டங்களின் கீழ் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று அமைச்சர் குறிப்பிட் டார்.

இவற்றில் ஆறு வீடமைப்புத் திட்டங்கள் சீன அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்காக 552 மில்லியன் சீன யுவான் (2 ஆயிரத்து 200 கோடி ரூபாய்) உதவித் தொகையாக பெறப்படும் என்றும், 1996 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)



# சஜித் - டலஸ் தரப்புகள் தொடர்ந்தும் பேச்சில்!

கொழும்பு, ஜன. 01

2024 ஆம் ஆண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களை மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கு கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூட்டணியை அமைப்பதற்கான அங்கீகாரத்தை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழுவில் மீண்டும். கோரியிருந்தார்.

இதற்கு முழுமையான அங்கீகாரம் மத்திய செயல்குழு வழங்கியிருந்த போதிலும் சில நபர்களை இணைப்பதில் சிக்கல்களை ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் மூலம் ஏற்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது.

ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்று சுயாதீனமாக செயல்படும் டளஸ் அழகப்பெரும, ஜீ. எல்.பீரிஸ், விமல் வீரவன்ஸ, சரித ஹேராத் மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்ட 13 பேர் கொண்ட குழுவுடன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி குறித்து கலந்துரையாடி வருகின்றது.

இந்த கலந்துரையாடல்களின் போது ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலை மையப்படுத்தி அமைக்கப்படுகின்ற ஐக்கிய மக்கள் சக்தியை தலைமையாகக் கொண்ட கூட்டணியின் பிரதித்தலைவர் பதவி டளஸ் அழகப்பெருமவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவோ, ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய மூத்த தலைவர்களோ விரும்பவில்லை. கூட்டணியில் பிரதி தலைவர் பதவியை கோரி முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் நெருக்கடிகளை சந்தித்திருந்த நிலையில், தேசிய அமைப்பாளர் பதவியை டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி விருப்பம் தெரிவித்துள்ளது.

எனினும், இதனை டலஸ் அழகப்பெரும விரும்பாத நிலையில் கலந்துரையாடல்களில் பங்கேற்காது உள்ளார். ஆனால், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் தொடர்ந்தும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

### யுத்திய நடவடிக்கையில்

# 85 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றல்

கொழும்பு, ஜன. 01

யுத்திய நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 85 கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 55 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் முடக்கப்பட்டதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் போதைப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பொது மக்கள் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு திணைக்களங்களுக்கு 10,798 தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன என்றும் அமைச்சு தெரிவித்தது.

(ஐ)

# பட்டாசு தொழிற்சாலையில் வெடிப்பு உரிமையாளர் உட்பட இருவர் காயம்!

கொழும்பு, ஜன. 01

வீடு ஒன்றில் இயங்கிய சட்டவிரோத பட்டாசு உற்பத்தி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் அதன் உரிமையாளரும் அவரின் இரு பிள்ளைகளும் தீக் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை கொழும்பு - பிலியந்தலை - மாவித்தபுரவில் இடம்பெற்றது.

இந்த சம்பவத்தில் வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட தளபாடங்கள் மற்றும் பட்டாசு தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டில் பட்டாசுகள் மற்றும் பட்டாசுகளுக்குத் தேவையான ஏனைய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. புதுவருடத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட பட்டாசுகளை நேற்று சந்தைக்கு கொண்டு செல்வதற்கு முயற்சிகளை முன்னெடுத்தபோதே இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஆணையாளரின் அறிவுறுத்தல்கள்!

கொழும்பு, ஜன. 01

கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சை நாட்களில் அரை மணி நேரத்துக்கு முன்னதாக பரீட்சை நிலையங்களுக்கு வருகை தருமாறு பரீட்சைகள் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது. 2600இற்கும் மேற்பட்ட பரீட்சை நிலையங்களில் உயர் தர பரீட்சை நடைபெறவுள்ளது.

இது குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர விடுத்துள்ள அறிவிப்பில்,

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டையை என்பவற்றை வைத்திருப்பது கட்டாயமானது என்றும் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 01

புத்தாண்டை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு நகரில் உள்ள 5 பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய வகையில் நேற்றைய தினம் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் உதவியும் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# பொலிஸார் மீது கைக்குண்டுவீச முயன்ற முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, ஜன. 01

போதைப்பொருள் குற்றத்துக்காக முன்னாள் சிப்பாய் ஒருவரை கைது செய்ய முயன்ற போது, அவர் பொலிஸார் மீது கைக்குண்டை வீச முயன்றார் என்று தெரிய வந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த கைது சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அநுராதபுரம் - கெக்கிராவை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றி அடிப்படையில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த நபர் ஒருவரை கைது செய்ய முயன்றனர்.

இராணுவத்தின் விசேட அதிரடிப் படையின் முன்னாள் சிப்பாயான அவரின் வீடு சுற்றி வளைக்கப்பட்டபோது அவர், பொலிஸார் மீது கைக்குண்டை வீசி தாக்குதல் நடத்த முயற்சித்தார். அந்த சமயம் பொலிஸார் புத்திசாதுரியமாக அவரை கையாண்டதால் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அத்துடன், சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார் என்று கெக்கிராவை பொலிஸார் தெரிவித்தனர்.

# எங்களின் பரந்த கூட்டணியை கண்டு ஜனாதிபதிக்கு அச்சம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஜன. 01

**ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாற்றமடைவதை கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சமடைமந்துள்ளார். இதனாலேயே, ஊடக வலையமைப்புக்கள் ஊடாக எமக்கெதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் எமது உயர்வை தடுக்க முடியாது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மாத்தறையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாறுவதற்கு அஞ்சி, உறவினர்கள் மற்றும் நண்பர்கள், ஊடக வலையமைப்புகளைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றார். இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியமைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது. இவ்வாறான நிலையிலும் கூட மக்களுக்கு வழங்கப்படும் இலவச மருந்துகளில் மோசடிகள் இடம்பெறுகின்றன. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்த அனைவரும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டில் நீதி, நியாயம் மற்றும் உண்மையின் வெற்றிக்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்நிற்கும். துப்பாக்கி ஏந்திய நரியின் முன் மண்டியிடும் நபர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. வருமானத்தை



ஈட்டுவதற்கு சரியான தொலைநோக்கு பார்வையும் வேலைத் திட்டமும் இருக்க வேண்டும்.

நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் யார் என்பதை நாம் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளோம். எனவே, அதற்கு காரணமானவர்கள்மீது பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்து இழப்பீட்டை பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (ஐ)

# புத்தளம் விபத்தில் 9 பேருக்கு காயம்!

புத்தளம், ஜன. 01

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் பகுதியில் இருந்து கொழும்பு திசை நோக்கிச் சென்ற காரும் நீர்கொழும்பு பகுதியில் இருந்து புத்தளம் திசை நோக்கி பயணம் செய்த மற்றுமொரு காரும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் இரு கார்களிலும் பயணித்த மூன்று சிறுவர்கள் உட்பட 9 பேர் காயமடைந்த நிலையில் முந்தல் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் எட்டு பேர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் மாவட்ட மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் , ஒருவர் முந்தல் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ)

# போதைப்பொருட்களுடன் ஏழு இளைஞர்கள் கைது!

ஹற்றன், ஜன. 01

சிவனொளிபாதமலைக்கு போதைப் பொருட்களுடன் வந்த ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிவனொளி பாதமலை யாத்திரை கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது. அங்கு போதைப்பொருள் நுகர்வு, விற்பனையை தடுக்க பொலிஸார் விசேட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த 3 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில், மதன மோதகம் என்ற போதை பொருள் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், கேரள கஞ்சா , சட்டவிரோத சிகரட்டுக்கள், போதை மாத்திரைகளுடன் சிவனொளி பாதமலைக்கு செல்ல முயன்ற 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை ஹற்றன் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கிரிந்திவலை, கொழும்பு, குருணாகல் உள்ளிட்ட நாட்டின் பல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# 2 இலட்சம் சுற்றுலாவிகள் டிசெம்பர் மாதம் வருகை!

கொழும்பு, ஜன. 01

டிசெம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின எண்ணிக்கை 2 இலட்சத்தை கடந்ததாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் சமூகவலைத் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இது கடந்த நான்கு வருடங்களில், மாதமொன்றில் வருகைததந்த அதிகபட்சமான சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையாகும். கடந்த



ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இலங்கைக்கு 14 இலட்சத்து 66 ஆயிரத்து 556 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதற்கமைய, தற்போது சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 15 இலட்சத்தை நெருங்கியிருந்தது. 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலா பயணிகளின் வருகையை எட்டுவதை, கடந்த ஜனவரி மாதத்தில் அரசாங்கம் இலக்காக நிர்ணயித்தது. எனவே, குறித்த இலக்கை தற்போது அண்மித்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

# நல்லாட்சி அரசில் மூடிமறைக்கப்பட்ட வழக்குகள் மீண்டும் விசாரிக்கப்படும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி காலத்தில் என்கிறார் முஜிபுர்!

கொழும்பு, ஜன. 01

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மூடிமறைக்கப்பட்ட வழக்குகள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் இதனை தெரிவித்துள்ளார்.

“நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின் போது பல வழக்குகள் மூடி மறைக்கப்பட்டன. ஆனால், எமது ஆட்சிக் காலத்தில் அந்த வழக்குகள்



அனைத்தும் மீள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதற்காக நீதித்துறைக்கு தேவையான வளங்கள் வழங்கப்படும். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எமது ஆட்சியின்போது தப்பவே முடியாது.

நாம் “பைல்களை“ காட்டிக் கொண்டு சும்மா இருக்கமாட்டோம். நல்லாட்சி காலத்தில் “டீல்“ காரணமாக மறைக்கப்பட்ட பல வழக்குகள் உள்ளன.

இது குறித்து ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷக்களுக்கு இடையில் உடன்படிக்கையும் உள்ளது. இவ்வாறு மறைக்கப்பட்ட அனைத்து வழக்குகளும் மீள விசாரணைக்கு சட்டத்தின் முன் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள், கொள்ளை அடிக்கப்பட்ட பணமும் மீளப் பெறப்படும்” என தெரிவித்தார்.

# சகல அரசாங்க ஊழியர்களும் இன்று பணிக்கு வரவேண்டும்!

## பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 01

புது வருட தொடக்கமான இன்று திங்கட்கிழமை அனைத்து அரச பணியாளர்களின் பங்கேற்புடன் உறுதிமொழி ஏற்பு நிகழ்வை தமது பணியிடங்களில் நடத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசமைப்பு சபையின் பிரதானிகளுக்கு சுற்றறிக்கை மூலம் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதான உத்தியோக பூர்வ வைபவம் நாளை முற்பகல் 9 மணிக்கு ஜனாதிபதி பணிமனை வளாகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களுக்கு வினைதிறனுள்ள மற்றும் பயனுள்ள அரச சேவையை வழங்குவதற்கு முழு அரச சேவையும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். இதனால், தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரச நிறுவனங்களிலும் இந்நிகழ்வு நடத்தப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் அரச சேவை உறுதிமொழியை உரத்த குரலில் உரைக்க வேண்டும் என அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# திருமலையில் கனமழையால் பல கிராமங்கள் வெள்ளத்தில்!

## 100 குடும்பங்களுக்கு மேல் பாதிப்பு

திருகோணமலை, ஜன. 01

**கிண்ணியாவில் பெய்துவரும் கனமழையால் சோளவெட்டுவான், காரவெட்டுவான், தகரவெட்டுவான், மயிலப்பன் சேனை உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.**



திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பாறு கிராம சேவகர் பிரிவிலுள்ள சில கிராமங்களின் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால், நேற்று முன்தினம் முதல் இந்தப் பகுதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. சோளவெட்டுவான், காரவெட்டுவான், தகரவெட்டுவான், மயிலப்பன் சேனை உள்ளிட்ட கிராமங்களுக்கு செல்லும் வீதிகளே இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கனமழையால் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள், மன்னம்பிட்டி பகுதியில் உள்ள வான் கதவுகள் திறக்கப்பட்டதால் மகாவலி கங்கையின் நீரேந்து பகுதியில் இந்தக் கிராமங்கள் அமைந்துள்ளதால் அவை வெள்ளத்தில் மூழ்கின என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வெள்ளத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. (ஐ)



# வெள்ளம் வடிந்தோட வசதியாக முகத்துவாரம் வெட்டிவிடப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக பெய்துவந்த பலத்த மழையால் வெள்ள நீர் வழிந்தோட வழியில்லாததால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இதையடுத்து, இந்த வெள்ளம் வழிந்தோட வசதியாக பெரியகல்லாறு முகத்துவாரம் நேற்று முன்தினம் வெட்டிவிடப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் நீர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினத்துக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைய இந்த முகத்துவாரம் வெட்டும் பணி நடைபெற்றது. (ஐ)




# தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மகளிர் அணிக்கு புதிய நிர்வாகம்!

மட்டக்களப்பு, ஜன. 01

இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணிக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட ஜனநாயக ரீதியிலான வாக்கெடுப்பு மூலம் தலைவி மற்றும் ஏனைய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிரணி தலைவியாக திருமதி ரஞ்சினி கனகராசா, செயலாளராக திருமதி ரஜனி ஜெயப்பிரகாஷ், பொருளாளராக திருமதி கந்தையா கலைவாணி, உபதலைவராக திருமதி கௌரி தயாளகுமார், உப செயலாளராக திருமதி தேவமணி ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்கள் சகல பிரதேச பிரிவு ரீதியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆலோசகராக திருமதி பிரபா செல்வராசா ( முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பொன். செல்வராசாவின் மனைவி) ஆகியோர் தெரிவாகினர். (ஐ)

# சிறைக் கைதியின் குடும்பத்துக்கு தையல் இயந்திரம் அன்பளிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 01

படுகொலை ஒன்றுக்காக மரண தண்டனை வழங்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் கைதியின் மகளுக்கு மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகள் நலன்புரி சங்கத்தால் தையல் இயந்திரம் நேற்று வழங்கப்பட்டது.

மரண தண்டனை கைதி தனது மகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் படி சிறைச்சாலை திணைக்களம் ஊடாக விடுத்த வேண்டுகோளை அடுத்து மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் தையல் இயந்திரத்தை நேற்று வழங்கினர்.



மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகள் நலன்புரி சங்கத்தின் தலைவர் எஸ். ராஜா தலைமையில் நடைபெற்ற தையல் இயந்திரம் கையளிப்பு வைபவத்தில் மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (ஐ)

# இரத்ததான முகாம் நடைபெற்றது!

மட்டக்களப்பு, ஜன. 01

கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகம் இந்து கலாசார மண்டபத்தில் இரத்த தான முகாமை நடத்தியுள்ளது.

மட்டக்களப்பு போதானா வைத்தியசாலை மற்றும் கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனைகளின் இரத்த வங்கி பிரிவுகளின் ஆதரவுடன் இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது.

வழக்கம்போல் இம்முறையும் இதற்கான அனுசரணையை லண்டனில் வதியும் சுதாகர், கலிஸ்கா ஆகியோர் வழங்கினர்.

கல்லாறு மத்திய விளையாட்டு கழகத்தின் 16ஆவது ஆண்டை முன்னிட்டு 14ஆவது ஆண்டாக இந்த இரத்த தான முகாம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதில், ஏராளமான இளைஞர், யுவதிகள் இரத்த தானம் வழங்கினர். (ஐ)

# புத்தாடை தைக்க சென்ற சிறுமிமீது வன்புணர்வு!

திருகோணமலை, ஜன. 01

புத்தாடை தைப்பதற்காக தையலகத்துக்கு சென்ற சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை - குமரன் கடவை பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், 27 வயது இளைஞரே கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

புத்தாடை தைப்பதற்காக சிறுமி தையலகத்துக்கு சென்றுள்ளார். தையல்காரரான இளைஞர் சிறுமியை காத்திருக்கும்படி கூறியுள்ளார். பின்னர் கடையை மூடிவிட்டு அவரை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இளைஞர் திருமலை நீதிவானின் இல்லத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

# இனப்படுகொலை செய்கிறது இஸ்ரேல்! ஐ. சி. சியில் தென்னாபிரிக்கா வழக்கு!

கேப்டவுன், ஜன. 01

இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

இனப்படுகொலை தொடர்பான சாசனத்தின் கீழ் தென்னாபிரிக்கா வழக்கு தாக்கல் செய்துள்ளதை ஐ. சி. ஜே. உறுதி செய்துள்ளது.

இனப்படுகொலை இடம்பெறுவதை தடுக்கவேண்டிய கடப்பாடுள்ளதாக தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் சிக்குப்பட்டுள்ள மக்களின் நிலைமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள தென்னாபிரிக்கா, கண்மூடித்தனமான படை பல பிரயோகமும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களை பலவந்தமாக வெளியேற்றுதலும் இடம்பெறுவதாக குறிப்பிட்டுள்ளது.

மனித குலத்துக்கு எதிரான குற்றம், போர் குற்றங்கள் போன்றவை இடம்பெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகின்றன. இனப்படுகொலை அல்லது அதனுடன் தொடர்புபட்ட குற்றங்கள் என தெரிவிக்ககூடிய சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று அறிக்கைகள் வெளியாகின்றன என தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

இதேநேரம், இஸ்ரேல் இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என நிராகரித்துள்ளது.

(ஐ)

# கனடாவில் வாழும் காலிஸ்தானியரை தீவிரவாதியாக அறிவித்தது இந்தியா!

புதுடில்லி, ஜன. 01

கனடாவில் வசிக்கும் லக்பீர் சிங் லண்டா (34) தீவிரவாதி என்று இந்தியா அறிவித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன்மாதம் மர்ம நபர்களால் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதற்கு இந்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே மேற்கண்ட அறிவிப்பை இந்திய மத்திய உள் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட அறிவிக்கையில், “மர்ம நபர்களால் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், சீக்கியர்களுக்கான நீதி அமைப்பின் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னு, காலிஸ்தான் புலிப்படை உள்ளிட்ட காலிஸ்தான் ஆதரவு அமைப்புகளுடன் லண்டா தொடர்பு வைத்திருந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என கூறப்பட்டுள்ளது.

பப்பர் கல்சா இன்டர்நேஷனல் (பிகேஐ) என்ற காலிஸ்தான் ஆதரவு இயக்கத்தைச் சேர்ந்த லண்டா, பஞ்சாப் மாநிலம் டார்ன் டார்ன் மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்.

(ஐ)



# ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல்! 21 பொதுமக்கள் உயிரிழந்தனர்!!

மொஸ்கோ, ஜன. 01

ரஷ்யாவின் பெல்கொரோட் நகரம்மீது உக்ரைன் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட 21 பேர் கொலலப்பட்டனர் என்றும் 111 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா உக்ரைன் நகரங்களை இலக்கு வைத்து மிகப்பெரிய வான்தாக்குதல்களை மேற்கொண்டதை தொடர்ந்து உக்ரைன் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

பெல்கொரொட் நகரின் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது என டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த குற்றச்செயலுக்கு தண்டனை வழங்காமலிருக்கப் போவதில்லை என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைன்அரசாங்கம் முன்னரங்குகளில் ஏற்பட்ட தோல்விகள் குறித்து கவனத்தை திசைதிருப்ப முயல்கின்றது. எங்களையும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க தூண்டுகின்றது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுடனான எல்லையில் உள்ள நகரங்களை இலக்கு வைத்து உக்ரைன் கடந்த ஒரு வருட காலத்துக்கு மேல் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. எனினும் இந்தத் தாக்குதலிலேயே பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

(ஐ)

# ஹமாஸுக்கு எதிரான போர் இன்னும் பல மாதங்கள் தொடரும்!

இஸ்ரேல் பிரதமர்



காஸா, ஜன. 01

ஹமாஸுக்கு எதிரான போர் “இன்னும் பல மாதங்களுக்கு” தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா நகரம் மீது இஸ்ரேல் கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் போர் தொடுத்து வருகிறது. போர் தொடங்கிய சமயத்தில் வடக்கு காஸாவை குறிவைத்து சரமாரியாக தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல் பின்னர் தெற்கு காஸாவை நோக்கி தாக்குதல்களை விரிவுபடுத்தியது.

இதன் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களாக மத்திய காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தரை வழியாகவும், வான்வழியாகவும் தீவிரமாக தாக்குதல்களை நடத்தி வருகிறது. இஸ்ரேலின் இந்த ஆக்ரோஷமான தாக்குதல்களால் காஸாவில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் காஸாவில் இதுவரை 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

ஏற்கனவே, போரின் விளைவால் காசாவில் உணவு, குடிநீர், உயிர்காக்கும் மருந்து உள்ளிட்டவற்றுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், இஸ்ரேல் நாளுக்கு நாள் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதால் பாதிகப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை கொண்டு சேர்ப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில் காசாவில் மனிதாபிமான நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருவதாக ஐ. நா. எச்சரித்துள்ளது.

இந்நிலையில், ஹமாஸுக்கு எதிரான போர் “இன்னும் பல மாதங்களுக்கு” தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். மேலும் ஜோ பைடன் நிர்வாகத்தின் தொடர்ச்சியான ஆதரவுக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே போரில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்து வரும் அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது. அந்த வகையில் 14. 7 கோடி டொலர் (சுமார் 4 ஆயிரத்து 769 கோடி இலங்கை ரூபாய்) மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்யவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(ஐ)

# இம்ரான் கானின் இரு வேட்புமனுக்களையும் இரத்து செய்தது பாகிஸ்தான் தேர்தல் குழு!

லாகூர், ஜன. 01

தேர்தலில் போட்டியிடுவதற்காக இம்ரான் கான் தாக்கல் செய்த இரு வேட்பு மனுக்களையும் பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு இரத்து செய்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான் பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் (பி. ரி. ஐ.) கட்சித் தலைவராக உள்ளார்.

71 வயதான இம்ரான் கான், 2018 முதல் ஏப்ரல் 2022, வரையிலான காலகட்டத்தில் பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்தார். இம்ரான்கான் தன்னுடைய பதவி காலத்தில் வெளிநாட்டு தலைவர்களிடம் இருந்து பெற்ற பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் ஒப்படைக்காமல் முறைகேடாக விற்று சொத்து சேர்த்தார் என்று தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த இஸ்லாமாபாத் உச்சநீதிமன்றம் இம்ரான் கானுக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறை தண்டனைக்கு இடைக்கால தடைவிதித்து, அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. ஆனால், பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய இரகசிய தகவல்களை கசியவிட்டார் என்று கூறி தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கைது செய்யப்பட்டார். இதனால் அவர் தொடர்ந்து சிறையில் இருந்து வருகிறார்.

இந்த சூழலில் அடுத்த ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெறும் பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் இம்ரான்கான் சிறையில் இருந்தபடியே போட்டியிடுவார் என அவரது பாகிஸ்தான்-தெஹ்ரீப்-இ-இன்சாப் கட்சி அறிவித்தது. இதன்படி பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பாராளுமன்ற தொகுதிகளான லாகூர் மற்றும் மியான்வாலி ஆகிய 2 தொகுதிகளில் இம்ரான் கான் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.



இந்நிலையில் இம்ரான்கானின் 2 வேட்புமனுக்களையும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் இரத்து செய்துவிட்டது. தோஷ்கானா வழக்கில் தண்டிக்கப்பட்டவர் என்பதால் இம்ரான் கானின் வேட்பு மனுக்களை இரத்து செய்ததாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# சுற்றிவளைப்பின்போது மோதல் பொலிஸ் உத்தியோகத்தர் பலி!

கொழும்பு, ஜன. 01

**சுற்றிவளைப்பின்போது தப்பியோட முனைந்த குழு ஒன்றுக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.**

மாத்தறை - வெலிகம பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவரே இந்த மோதலில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று காலை வெலிகமவில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. இதன்போது குழு ஒன்று வானில் தப்பியோட முயன்றது.

அப்போது, வானில் இருந்த குழுவினர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கி சூட்டை நடத்தினர். பதிலுக்கு பொலிஸாரும் துப்பாக்கி சூட்டை நடத்தினர்.

இதில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சுதந்திர தினம் 44 இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு!

அபுதாபி, ஜன. 01

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் 52ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அந்நாட்டு சிறைகளில் வைக்கப்பட்டிருந்த 44 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதேவேளை, 44 இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதன் மூலம் இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களை அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சுடன் இணைந்து நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளன. (ஐ)



# 7.7 கிலோ தங்க பிஸ்கெட்களுடன் ஒருவர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஜன. 01

7 கிலோ 700 கிராம் தங்கத்துடன் சிறீ லங்கன் கேட்டரிங் நிறுவன ஊழியர் ஒருவர் சுங்கத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளால் சிறீ லங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்க பிஸ்கட்டுகளுடன் சந்தேக நபர் விமான நிலைய புறப்படும் முனையத்தின் பணியாளர்கள் வெளியேறும் வாயில் வழியாக வெளியேறும்போதே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரின் உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 66 தங்க பிஸ்கெட்கள் சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட தங்கம் 7 கிலோ 700 கிராம் எடையுடையது எனவும், இதன் பெறுமதி ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் சிறீ லங்கன் கேட்டரிங் நிறுவனத்தில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய ஊழியர் என சுங்க பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சிறையில் நோய்வாய்ப்பட்ட இரண்டாவது கைதியும் மரணம்!

கொழும்பு, ஜன. 01

மாத்தறை சிறைச்சாலையில் நோய்வாய்ப்பட்ட மற்றொரு கைதியும் உயிரிழந்தார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மாத்தறை சிறைச்சாலை கைதிகள் மத்தியில் பரவிய மூளைக்காய்ச்சல் நோயால் பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

சிறைச்சாலை கைதிகள் மத்தியில் மூளை காய்ச்சல் பரவி வருவதாக சிறைச்சாலை தகவல்கள் அண்மையில் குறிப்பிட்டன.

இந்நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் சிலர், தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த 53 வயதான கைதி ஒருவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேபோன்றும் அண்மையில் மற்றுமொரு கைதி ஒருவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தம்பியை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த அண்ணன் கைது!

கொழும்பு, ஜன. 01

குடும்ப தகராறில் தம்பியை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்த குற்றத்துக்காக அண்ணன் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் - கல்நேவ பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அவுக்கணை பிரதேசத்தை சேர்ந்த லலித் சந்திரகுமார என்ற 46 வயதுடைய முன்னாள் கடற்படை சிப்பாயாவார். இவர் கடற்படை முகாமில் கடமையாற்றும் காலத்தில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஊனமுற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

இந்நிலையில், இரு சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், அண்ணன் தம்பியாரின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார். காயமடைந்து நிலத்தில் விழுந்தவரை அவர் மீண்டும் தாக்கி கொலை செய்தார்.

இந்த சம்பவம் தாயருக்கு முன்பாகவே இடம்பெற்றுள்ளது. தாயார் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய கொலை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தேருநர் இடாப்பு மீளாய்வு இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 01

அரசமைப்பின் பிரகாரம் 2024 ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க இன்று திங்கட்கிழமை முதல் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அறிவித்தார்.

அரசமைப்பின் அடிப்படையில் ஒக்ரோபர் 16ஆம் திகதி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கான பிரதான பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக தற்போது, முன் ஆயத்த செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அந்தவகையில், 2024ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஜனவரி முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஊடகங்கள் ஊடான விளம்பரங்கள் நாளை (இன்று) முதல் வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

வழக்கமாக ஆண்டுதோறும் தேருநர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் பெப்வரி முதலாம் திகதியிலிருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. எனினும், இந்த ஆண்டு தேர்தல் காலமாக இருப்பதனால் ஆணைக்குழுவானது அப்பணியை முற்கூட்டியே ஆரம்பித்துள்ளது - என்றார். (ஐ)

# பாரவூர்தி - கார் மோதி விபத்து கணவன் பலி;மனைவி படுகாயம்!

கொழும்பு, ஜன. 01

பாரவூர்தியும் காரும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் காரை செலுத்திச் சென்ற கணவன் உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்தார்.

இந்த கோர சம்பவம் அநுராதபுரம் - கெக்கிராவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 31 வயதான இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்தார்.

பாரவூர்தியை செலுத்திச் சென்ற இராணுவத்தின் முன்னாள் சிப்பாய் கைதானார். (ஐ)

# யுக்திய நடவடிக்கையில் மேலும் 1,554 பேர் கைது

கொழும்பு, ஜன. 01

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மேலும் ஆயிரத்து 554 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் பிடியாணை உத்தரவுக்கு அமைய 82 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சட்டவிரோத சொத்து விவகாரம் தொடர்பில் 2 பேர் விசாரிக்கப்படவுள்ளனர்.

# இரு குழுக்களிடையே வாள்வெட்டு; அரசியல்வாதி உட்பட ஐவர் காயம்!

கொழும்பு, ஜன. 01

இரு குழுக்களிடையே இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி. என். பி. பெரேரா உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு - வாதுவை - மொல்லிகொடையில் உள்ள பெரேராவின் வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்ட முடியும் என்று தாக்குதலில் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ)

# திருகோணமலையில் தன்னை தாக்கியோரை கஜேந்திரன் திருப்பி தாக்கியிருக்க வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

வவுனியா,ஜன.01

திருகோணமலையில் கஜேந்திரனை மக்கள் அடித்துத் துரத்தியபோது அவர் கோழை போல் ஓடினார். அவர் திருப்பித் தாக்கியிருக்க வேண்டும். அதற்கு முதுகெலும்பில்லாத தைரியம் இல்லாதவர்கள் இன்று சகட்டுமேனிக்கு ஏதோ பேசுகின்றனர் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “அந்தக் காலத்தில் கைப்பிள்ளை கஜேந்திரன், 40 ஆயிரம் சவப்பெட்டிகளைத் தயார் செய்யுங்கள் என்று பாராளுமன்றில் கூறினார். குறித்த விடயம் சிங்கள மக்களிடத்திலும் ஆயுதம் தரித்தவர்கள் மத்தியிலும் ஒரு கொதநிலையை ஏற்படுத்தக்கூடியது. அவர் அவ்வாறு கூறிவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

பின்னர் அந்தக் காலப்பகுதியில் பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியுடன் டீல் பேசினார். தன்னிடம் பல இரகசியங்கள் இருக்கின்றன, அதனை நான் சொல்கின்றேன், எனது சகோதரரை விடுவியுங்கள் என்று அவர் கோரினார். பின்னரே அவர் இலங்கை வந்தார்.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக புலிகள் அமைப்பில் வாகனங்களுக்கு பொறுப்பாக இருந்த குட்டி என்பவர் பாராளுமன்றில் அவருக்கு கொடுத்த வாகனத்தைத் தருமாறு கேட்டிருந்தார். அதற்கு 40 இலட்சம் ரூபாய் பணத்தை பாராளுமன்றத்துக்கு செலுத்தினாலேயே அந்த வாகனத்தை எடுக்க முடியும் என்று கைப்பிள்ளை கூற குட்டி என்பவர் அந்தப் பணத்தை அனுப்பியிருந்தார்.

அந்தப் பணத்தையும் கைப்பிள்ளை எடுத்துக்கொண்டு வாகனத்தைப் பூட்டிவிட்ட பின்னரே வெளிநாடு சென்றார். பின்னர் மீண்டும் இங்கு வந்து மணற்தரை என்ற பகுதியில் காணி வாங்கி வீடு கட்டி வசதியாக இருக்கின்றார். இவர்கள் மக்களுடைய நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் மக்களுக்குத் தவறான வழிகாட்டுதல்களை வழங்கி மக்களை உசுப்பேற்றுகின்றார்கள்.

இவை ஆரோக்கியமான விடயமல்ல. இதேநேரம் எங்களுக்குப் பயந்தே வெளிநாடு ஓடியதாக அண்மையில் அவர் கூறியிருந்தார். இன்று நான் இருக்கின்றேன். ஆனால், அவர் யாருக்குப் பயத்தில் ஓடினாரோ அவர்கள் இன்று இல்லை.

அப்படியானால் யாருக்கு பயந்து அவர் ஓடியிருக்க முடியும்.? அந்தக் காலகட்டத்தில் வெலிக்கடை சிறையில் சிங்களவர்களாலும், களுத்துறை சிறையில் தமிழர்களாலும் நான் தாக்கப்பட்டேன்.

ஆனால், நானும் திருப்பித் தாக்கினேனே தவிர நாட்டைவிட்டு ஓடவில்லை. ஆனால், இந்தக் கைப்பிள்ளை திருகோணமலை மக்களை உசுப்பேற்றி குழப்பினார். அந்த மக்கள் அடித்துத் துரத்தியபோது ஓடியதை அனைவரும் காணொலியில் பார்த்திருப்பீர்கள். அவர் கோழைபோல் ஓடினார். அவர் திருப்பித் தாக்கியிருக்க வேண்டும். அந்தச் சம்பவத்துக்கு மனம் வருத்துகின்றேன். ஆனால், அவர் மீண்டும் தாக்கியிருக்க வேண்டும். அதற்கு முதுகெலும்பில்லாத தைரியம் இல்லாதவர்கள் இன்று சகட்டுமேனிக்கு ஏதோ பேசுகின்றனர்” - என்றார்.

(ஐ)

## மக்களின்...

அரசியல்வாதிகள் தொடர்பில் அறிந்து, அவர்களிடமிருந்து ஆட்சியை பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் யார் வந்த எந்த வாக்குறுதிகளை வழங்கினாலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே ஊழல், மோசடியற்ற நாட்டை நேசிக்கும் தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

நிவாரணங்களுக்காகவும், சமுர்த்தி கொடுப்பனவுகளுக்காகவும் வாக்களித்தால் கடந்த ஆண்டைப் போன்று மீண்டும் அனைத்தையும் இழக்க நேரிடும். இவ்வருடம் அரசமைப்புக்கேற்ப அனைத்து தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும். ஆனால், மக்கள் சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை எனினும் மீண்டும் மக்கள் ஏமாற்றப்படுவதை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (ஐ)

## டான்...

உதயசீலன் பட்டம் வென்றிருந்தார். இதேபோன்று மலையக சிறுமியான அசானி கனகராஜும் பிரபலம் பெற்றிருந்தார்.

நேற்றைய தினம் 2024 புது வருடத்தை வரவேற்கும் 31 இன்னிசை இரவு நிகழ்ச்சியை டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தியது. இந்த நிகழ்வில் இசைவாணர் கண்ணனுக்கு ‘சாதனை தமிழன் - 2023’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதேவேளை, இசையுலகில் சாதித்த கில்மிஷா, அசானி ஆகிய இரு சிறுமிகளும் மதிப்பளிக்கப்பட்டனர்.

இரு சிறுமிகளுக்கும் இசைவாணர் கண்ணன் பொன்னாடை போர்த்தி ஆசிர்வாதம் அளித்ததைத் தொடர்ந்து, கில்மிஷாவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும் அசானிக்கு பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனும் விருது வழங்கிக் கௌரவித்தனர். (ஐ)

## தாய்நாட்டின்...

நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களை பூர்த்தி செய்துகொள்ள நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புகள் மற்றும் துயரங்களைத் தாங்கிக் கொண்டதன் பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க எம்மால் முடிந்துள்ளது.

இருப்பினும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். அது மலர் பாதையாக இல்லாமல், முட்களும் கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும். இதனால், இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்போது எதிர்கொள்ளும் சவால்களை புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையரான எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்துக்கு ஜேனஸ் எனும் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது. அந்தக் கடவுளால் முன்னோக்கி மாத்திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம்.! அதனால் எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பிலும் அறிந்து ஒவ்வொருவரினதும் சவால்களை புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புகளை அறிந்துகொள்வோம். அவற்றை செயல்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம். அதற்காக பொறுப்புடனும் அர்பணிப்புடனும் செயல்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக் கொள்வோம். பிறந்திருக்கும் இந்த ஆண்டு - அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள் - என்றுள்ளது. (ஐ)

## பொருள்கள்...

ஏனைய கட்டணங்களை 20 சதவீதம் அதிகரிக்க நேரிடும் என்று தனியார் போக்குவரத்து சங்கம் அறிவித்துள்ளது.

இதேபான்று முச்சக்கரவண்டி கட்டணமும் அதிகரிக்கப்படுகின்றது. 30 சதவீதத்தால் முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்படுகிறது. முதல் கிலோமீற்றருக்கான கட்டணத்தில் (150 ரூபாய்) மாற்றமில்லாதபோதும் 2ஆவது கிலோமீற்றருக்கான கட்டணம் 80 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஓட்டோ ஓட்டுநர் சங்கம் அறிவித்துள்ளது.

### சிற்றுண்டி விலைகள்

இதேபோன்று, தேநீர் 5 ரூபாயாலும் பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாயாலும் சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாயாலும் சோறு மற்றும் கொத்து ரொட்டியின் விலை 25 ரூபாயாலும் அதிகரிக்கப்படுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

### கைபேசிகள்

கைபேசிகளின் விலைகள் வற்வரி உயர்வால் கைபேசிகளின் விலைகள் 35 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று கைபேசிகள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதனால், சந்தையில் 50 வீத வீழ்ச்சி ஏற்படும் என்றும் தெரிவித்தனர்.

### எரிவாயு விலை

லிட்ரோ எரிவாயுவின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளது. இந்த விலையேற்ற விவரம் இன்றைய தினமே வெளியிடப்படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேநேரம், பெற்றோல், டீசல், கைபேசிகள், மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்கள், மருந்து உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் அம்புலன்ஸ் வாகனம், இரசாயன உரங்கள், விவசாய இயந்திரங்கள், சோலர் பனல்கள், வீட்டு சூரிய சக்தி அமைப்புகள் மற்றும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி, நகைகள், மென்பொருள்கள், கொப்பரா, ரப்பர், முட்டை, தேயிலை, தேங்காய் எண்ணெய், திரவ பால், காலணிகள், கலைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், சுற்றுலாவிகளை அழைத்து வரும் முகவர் நிறுவனங்கள், திரைப்பட விநியோகம், கண்காட்சி - தயாரிப்பின் போது ஆய்வக வசதிகள், உள்ளூர் தானியங்கள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி அதி போசனை உணவுகள், தேங்காய் எண்ணெய் என்பவற்றுக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால், இவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

(ஐ)

## செபம்...

இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டு கடந்து சென்றுவிட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல, துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

மலரும் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. மலரும் புதிய 2024ஆம் ஆண்டை இறைவேண்டுதல் ஆண்டாக உலகம் முழுவதிலும் கடைப்பிடித்து இறைவேண்டுதலில் முழுமையாக ஈடுபடும்படி திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியும். உலகில் முடியாதது எனக் கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவு காண முடியும்.

கடந்த ஆண்டின் பல கடின அனுபவங்களின் தாக்கம் இன்னும் எம்மை விட்டு முழுமையாக அகலவில்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது என்ற பயம் முடிவில்லாத பயமாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியேதான் இதுபோன்ற எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும். இறை வேண்டுதல் ஆண்டான 2024ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறைவேண்டுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துகளை தெரிவிக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## இசைவாணர்...

இரவு’ என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது. 2024 புது வருடத்தை வரவேற்கும் முகமாக நடைபெறும் இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். - இந்திய கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழத்தின் தனித்துவமான இசையை உலகுக்கு அறியச் செய்தவரும் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு இசை மூலம் உரமூட்டியவருமான இசைவாணர் கண்ணனுக்கு ‘சாதனை தமிழன் 2023’ விருது வழங்கப்பட்டது.

இசைவாணர் கண்ணனை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்த, தொடர்ந்து யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் மாலை அணிவித்து மரியாதை வழங்க, டான் தொலைக்காட்சி குழும தலைவர் எஸ். எஸ். குகநாதன் விருது வழங்கிக் கௌரவித்தார். (ஐ)

## மதமாற்ற...

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்தார்.

அந்த மகஜரில், பல்லாயிரம் ஆண்டுகாலமாக வரலாறு கொண்ட இலங்கையின் இந்து சமயத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும், மதங்களின் மதமாற்ற முயற்சியை தடுப்பதற்கு பாராளுமன்றத்தில் மதமற்ற தடைச்சட்டத்தை இயற்ற வேண்டும், இந்து மதங்களுக்கும் பௌத்த மதங்களுக்கும் தெய்வமாக போற்றப்படும் பசுக்களை எவரும் கொல்லக்கூடாது? பசு வதை தடைச் சட்டத்தை இயற்றுக, ஒவ்வொரு ஆலயங்களில் நித்தியபூஜை வழிபாட்டில் பசுவை பூஜிக்க ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும், ஆரம்ப முன்பள்ளி பருவத்தில் உள்ள சிறார்களுக்கு பசுவை பாதிப்பது பற்றிய நூல்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் ஆகிய 5 முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இராமலிங்கேஸ்வர் அமைப்பின் செயல்பாட்டாளர் தி. சுந்தரேஸ்சன், சிவநேனை அமைப்பின் உறுப்பினர் த. புவனேந்தீரன், உருத்திரசேனை உறுப்பினர் சுஜீபன், இந்து தன்னார்ந்த தொண்டு சங்கம் தலைவர் வ. சாரகனான், திரிலங்கா புரி ஆதீனம் தி.விபுலாந்த அடியார், கோவிற்கடை ஜயப்பன் ஆலயத் தலைவர் த.கலாசாதக்குருக்கள், பசுவதை தடுக்கும் சமூக மன்ற தலைவர் ம.சிவலோகதேசிகசர்மா ஞானசீலன் உள்ளிட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பளை விபத்தில் ஒருவர் மரணம்!

கிளிநொச்சி, ஜன. 01

கிளிநொச்சி - பளை பகுதி யின் ஏ9 வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயி ரிழந்தார்.

பளை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்து நர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரி ழந்தார்.

இந்த விபத்தில், கொடிகாமத்தை சேர்ந்த 45 வய தான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

## மதுபானத்தை சேமித்து வைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

கொழும்பு, ஜன. 01

வற் வரி அதிகரிப்பு காரணமாக அனுமதியின்றி மதுபானங்களை சேமித்து வைக்கும் நபர்களுக்கு எதி ராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சோதனைகளை மேற்கொள்ளு மாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ள தாக கலால் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான கபில குமாரசிங்க தெரிவித்தார். (ஐ)

# ஹொரணை விபத்தில் இருவர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 01


பாணந்துறை - ஹொரணை பகுதியில் மூன்று வாக னங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளா னதில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் பொலிஸார் தெரி வித்தனர்.

பாணந்துறையில் இருந்து பண்டாரகம நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று முன்னால் சென்று கொண்டிருந்த லொறியை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்திசையில் வந்த கெப் ரக வண்டியுடன் மோதி விபத்துக்கு உள்ளானது. இதன்போது லொறியும் ஒட்டோவை மோதியுள்ளது.

விபத்தின்போது முச்சக்கரவண்டியின் சாரதியும் மற்றுமொரு நபரும் காயமடைந்து பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## நாட்டின் தேங்காய் உற்பத்தியை 100 கோடியால் அதிகரிக்க திட்டம்

### அமைச்சர் மகிந்த அமரவீர



கொழும்பு, ஜன. 01

நாட்டில் அடுத்த மூன்று வருடங்களுக்குள் நாட்டின் தேங்காய் உற்பத்தியை 100 கோடியால் மேலும் அதி கரிப்பதற்கான திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக விவ சாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போது வருடாந்த தேங்காய் உற்பத்தி 360 கோடி யாகும். இதில் 180 கோடி தேங்காய்கள் வரு டாந்த நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகின்றன. கைத் தொழில்க ளுக்கு மேலும் 60 கோடி தேங்காய்கள் தேவைப்படுகின் றன. இந்த இடைவெளியை ஈடுகட்ட ஒரு மரத்தில் இருந்து பெறப்படும் அளவை குறைந்தது இரண்டு தேங்காய்களாவது அதிகரிக்க வேண்டும்.

மேலும், வெட்டுக்கிளிகள் மற்றும் குரங்குகளால் வருடாந்தம் அழிக்கப்படும் தேங்காய்களின் அளவு 25 கோடியை தாண்டியுள்ளது - என்றும் கூறினார்.

அம்பாந்தோட்டை - சூரியவெவ - விகாரகல கிரா மத்தில் நூறு விவசாய குடும்பங்களுக்கு இலவச தென் னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார். (ஐ)

# பொதுவேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு தமிழ் மக்களை பிளவுபடுத்தும் செயலாம்

## நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்



கொழும்பு, ஜன. 01

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து பொது வேட்பாளரை களமிறக்குவதோ அல்லது தேர்தலை ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பதோ நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயலாகவே அமையும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அத்துடன், கடந்த கால அனுப வங்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் புதிய தேசிய அரசியல் கூட்டணியையும், இன, மத, மொழி வாதமற்ற வேட்பாள ரையும் அடையாளம் கண்டு அதில் பங்கேற்பதே சிறந்த அரசியல் சாணக்கியமான நடவடிக்கையாக அமையும். அவ்வாறு இல்லாது விட்டால் ஒட்டுமொத்த தமிழர்க ளையும் பிளவுபடுத்தும் செயல் பாடாகவே அமையும் என்றும் கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்த லில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற அதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தி யுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் விஜயதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கு தமது பூர்வீகமான பிரதேசம் என்ற நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தமது பிரதேசத்தை மையப்படுத்தியதாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கோ அல்லது தேர் தலை மக்களின் ஆதரவுடன் புறக் கணிப்பதற்கோ முழுமையான உரித்தைக் கொண்டிருக்கின்றன.

ஆனால், யதார்த்த நிலைமை களை பற்றி அந்தக் கட்சிகள் சிந்திப்பது தான் மிகவும் அவசிய மானதாகின்றது. வடக்கு, கிழக்கை மையப்படுத்திய பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டால் அந்த வேட்பாளருக்கு வெறுமனே அப் பகுதிகளில்தான் ஆதரவு கிடைக் கும். வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழ் மக்கள் ஆதரவளிக்காத நிலைமையொன்று ஏற்படுவதற்கே அதிகமான சாத்தியப்பாடுகள் உள்ளன.

இதனால், தேர்தல் முடிவில் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிளவுபடுத்துவ தாகவே அந்த முயற்சி மாறிவிடும் சூழலே அதிகமாக உள்ளது.

மறுபக்கத்தில், தமிழ் கட்சிக ளின் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவதில்லை. அவ் வாறு பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்ட பின்னர் தேசிய கட்சிகளின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றால் அதன் பின்னர் அசௌ கரியத்துக்கு உள்ளாகப்போவதும் தமிழ் மக்கள்தான். ஆகவே, அது பற்றியும் தமிழ்க் கட்சிகள் கரிசனை களை கொள்வதே பொருத்தமா னது.

என்னைப் பொறுத்தவரையில், தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கடந்த காலத்தில் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் பல்வேறு அதி ருப்தியான நிலைமைகள் காணப் படுவதை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த வகையில், தமிழ் அரசியல் கட்சிகள் தமது கடந்த கால அனுப வங்களின் அடிப்படையில் இன, மத, மொழி, வாதங்களற்ற, வாக்கு றுதிகளை மறுதலிக்கின்ற வேட்பா ளர் அற்றதொரு தரப்பை அடை யாளம் காண வேண்டும்.

அவ்வாறு தமிழ் அரசியல் கட்சி கள் அடையாளம் காணும் அரசியல் தரப்பானது புதிய தேசிய அரசியல் கூட்டணியாக இருப்பதோடு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது விடயங்களையும் உள்ளீர்ப்பதற் கான பேச்சுகளை முன்னெடுத்து தேசிய ரீதியில் பங்குபற்ற வேண் டும். அவ்விதமான தீர்மான மொன்றை தமிழ் அரசியல் கட்சி கள் முன்னெடுப்பதே அரசியல் சாணக்கியமாக அமைவதோடு தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கும் சிறந்ததாக காணப்படும். 1948இல் இலங்கை சுதந்திரமடைந்தபோது, சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் காணப்பட்டதை போன்றதொரு சூழலை உருவாக்கு வதற்கு தேசிய ரீதியில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்பா னது மிகவும் இன்றியமையாத தொரு விடயமாகும் - என்றார். (ஐ)

# அரச மருத்துவமனைகளில் அலட்சியம்; வருடாந்தம் 600 முறைப்பாடுகளாம்!

## சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜன. 01

அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார ஊழியர்களின் அலட்சியம் தொடர்பாக வருடத் துக்கு சுமார் 600 முறைப்பாடுகள் கிடைப்பெறுகின்றன என்று சுகா தார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் இதே போன்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன.

நோயாளர்களுக்கு சுகாதார பிரிவு தங்களால் இயன்ற உதவி களை செய்து வருகின்ற போதிலும் சில பிரச்னைகள் எழுவதாகவும் அவற்றைக் குறைப்பதற்கு அர்ப்ப ணிக்க வேண்டும்.

பேராதனை போதனா மருத்துவ மனையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அமைச் சர் ரமேஷ் பத்திரண, இது தொடர் பான முறைப்பாடுகளை பகுப் பாய்வு செய்வதில் பல குறைபாடு கள் காணப்படுகின்றன என்றும் சுட்டிகாட்டினார். (ஐ)

# "இந்தியாவின் முத்திரை வெளியீடு எம்மை நகைப்புக்கு உள்ளாக்கியுள்ளது!"

கொழும்பு, ஜன. 01

கடந்த பல ஆண்டுகளாக முக வரி இல்லாது வாழ்ந்த மக்களுக்கு முகவரி பெற்றுக்கொடுக்க வேண் டும் என இலங்கை நீதிமன்றம் இப்போதுதான் தீர்ப்பளித்திருக் கின்ற நிலையில் இந்தியா வெளி யிட்டிருக்கும் முத்திரை எங்களை நகைப்புக்கு உள்ளாக்கியுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

நேற்று ஹற்றனில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரி வித்தார்.

எங்களுக்கு தேவை முகவரியே தவிர முத்திரை அல்ல. இந்திய வம்சாவளி மக்கள் 200 என்றால் விஜயனும் அவர்களது தோழர் களும் இலங்கை வந்து 2,000 வரு டங்களை கடந்து விட்டன. விஜ னும் அவர்களின் தோழர்களும் மணம் முடித்தெல்லாம் இந்திய பெண்கள் என்றுதான் வரலாறு சொல்கிறது. எனவே இந்திய வம்சா வளியினர் 2,000 கடந்து மலையகம் 200இல்தான் இந்த முத்திரையை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதா? என்ற கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.


எனவே எங்களுக்கு முகவரியே இல்லை அந்த முத்திரையை ஒட்டி என்ன செய்வது என்ற கேள்விகளை நாங்கள் எழுப்ப வேண்டியிருக்கி றது. இந்தியாவால் வெளியிடப் பட்ட வீட்டுத்திட்டத்துக்கு என்ன நடந்தது? இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின் இந்திய அரசாங் கம் 50 ஆயிரம் வீட்டுத்திட்டங் களை இலங்கையில் அறிவித்தது - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ரூ.6000 கோடி சொத்து மதிப்புள்ள பா.ஜ.கவை நிதி திரட்டி காங்கிரஸ் தேர்தலில் வெல்ல முடியுமா?

**வினீத் கரே மற்றும் பாயல் புயான்**





மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக “தேசத்திற்காக நன்கொடை” ன்ற பெயரில் இணையம் வாயிலாக கூட்டுநிதி திரட்டும் பிரசாரத்தை காங்கிரஸ் தொடங்கியுள்ளது.

இதன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணையதளம் மூலம் கட்சிக்கு ரூ.138, 1,380, 13,800 அல்லது அதற்கு மேல் நன்கொடை அளிக்கலாம்.

இந்த இணையதளத்தைத் தொடங்கி வைத்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே பேசுகையில், “பொதுமக்களிடம் இருந்து உதவி பெற்று நாட்டைக் கட்டி யெழுப்ப காங்கிரஸ் கட்சி இந்த நடவடிக் கையை எடுத்துள்ளது இதுவே முதல் முறை,” என்றார்.

இந்த பிரசாரத்தின் கீழ் ரூ.6 கோடிக்கு மேல் இது வரை வசூல் செய்யப்பட்டுள் ளது என அந்த இணையதளத்தில் குறிப்பி டப்பட்டுள்ள தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலும், இதுவரை சுமார்



இரண்டு லட்சம் பேர் இந்த பிரசாரத்தில் இணைந்துள் ளதாக, காங்கிரஸ் தெரிவித் துள்ளது.

ஊடகங்களிடம் பேசிய காங்கிரஸ் பொருளாளர் அஜய் மக்கான், காங்கிர ஸுக்கு வளங்கள் குறைவாக இருப்பதால் இந்தப் பிரசாரம் தொடங்கப்பட்டுள்ளதாக அர்த்தம் இல்லை எனத் தெரிவித்தார்.






“இது எங்கள் தேர்தல் செலவு களை ஈடுசெய்யும் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை. இது எங்கள் இலக் குகூட இல்லை. இந்தப் பிரசாரம் ஒரு அரசியல் செயல்பாடு, இதன் மூலம் மக்களை இணைக்க முயல்கி றோம்,” என அவர் தெரிவித்தார்.

ஜனநாயக சீர் திருத் தங்களுக்கான சங்கத்தின் கருத் துப்படி , 2021-22ஆம் ஆண்டில், நாட்டின் எட்டு பெரிய அரசியல் கட்சிகளில், பாஜக சுமார் 6,046.81 கோடி ரூபாய் சொத்துகளுடன் முன்னணியில் உள் ளது, அதே நேரத் தில் காங்கிரஸின் சொத்து மதிப்பு சுமார் 806 கோடி.

அதாவது, காங் கிரஸைவிட ஏழு மடங்குக்கும் அதி கமான சொத்துகள் பாஜகவுக்கு உள் ளது. இந்தியாவில் தேர்தலில் போட் டியிடுவது மிகவும் விலை உயர்ந்தது என்பது இங்கு தெளிவாகிறது.

“தேசத்திற்காக நன்கொடை” பிரசாரம் தேர்தல் நெருங் கும் நேரத்தில் மேற்கொள்வது குறித்த கேள்விக்குப் பதிலளித்த அஜய் மக்கான், “இது முன்னதாகவே நடந் திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். முன்ன தாகச் செய்திருந்தால், இன்னும் சிறப்பாக நாங்கள் பொது மக்களுடன் இணைந்திருப்போம்,” என்பதை ஒப்புக் கொள்கிறார்.

தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் “தேசத்திற்கு நன்கொடை” பிரசாரத்தைத் தொடங்கியுள் ளது குறித்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழ கத்தின் முனைவர் ஆராத்யா சேத்தியா கூறுகையில், “இப்போது மிகவும் தாமதமாகி விட்டது. ‘தேர்தல் பிரசாரத்திற்காக பணம் தேவை, அதற்கு நாம் பணம் வழங்குகிறோம்’ என்ற ரீதியில் மக்கள் இதை எடுத்துக் கொள்வார்கள்” எனத் தெரிவித்தார்.

“ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ செய்தித்தாளின் அரசியல் ஆசிரியர் வினோத் ஷர்மாவின் கூற்றுப்படி, ‘தாமதம் தான் என்றாலும் இது சிறந்த முயற்சி. தாமதமாகச் செய்ததால் எந்த வித்தியாசமும் ஏற்படுத்தாது,” என்றார்.

அதேநேரம் , காங்கிரஸின் இந்தப் பிரசாரத்தை காந்தி குடும்பத்தை வளப்படுத்தும் மற்றொரு முயற்சி என்று ஆளும் பாஜக வர்ணித்துள்ளது.

பாஜக செய்தித் தொடர்பாளர் ஷேஜாத் பூனாவாலா கூறுகையில், “அறுபது ஆண்டுகளாக நாட்டைக் கொள் ளையடித்து வரும் நிலையில், இன்று, “தேசத்திற்கு நன் கொடை’ என்ற பிரசாரத்தை நடத்தி வருகின்றனர். “ஜீப் ஊழல்” முதல் “அகஸ்டா வெஸ்ட்லேண்ட் ஊழல்” “நேஷனல் ஹெரால்டு ஊழல்” என அறுபது ஆண்டுகள் ஊழல்கள் செய்து வருகின்றன.



அதுவரை நாட்டின் ஒவ்வொரு பைசாவையும் கொள் ளையடித்து, லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் கொள் ளையடித்து, நாட்டையே கொள்ளையடித்து, இன்று “தேசத்திற்காக நன்கொடை’ என்ற பிரசாரத்தை நடத்து கிறார்கள்,” என்றார்.

காங்கிரஸின் இந்தப் பிரசாரம் தொடங்குவதற்கு சில நாட்கள் முன்னர்தான், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மூன்று மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸை பாஜக தோற்கடித்தது. அதே நேரத்தில், தேர்தல் பிரசாரத்தின்போது ‘இந்தியா’ கூட் டணியின் நடவடிக்கைகளை காங்கிரஸ் முடக்கியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதற்கிடையில், அனைத்து கருத்துக் கணிப்புகளும் பிரதமர் நரேந்திர மோதி நாட்டின் மிகவும் பிரபலமான தலைவர் என்று கூறுகின்றன.

மூன்றாவது முறையாக அவர் பிரதமராக வருவார் என்ற நம்பிக்கையை பாஜக வெளிப்படுத்தி வரும் நிலை யில், தொடர்ந்து மூன்றாவது முறையாக நாடாளுமன் றத் தேர்தலில் பாஜகவை வெற்றி பெறவிடாமல் தடுப் பது எப்படி என்பதுதான் எதிர்க்கட்சிகளின் முன் உள்ள சவாலாக உள்ளது.

நாடாளுமன்ற பாதுகாப்பை மீறிய தாக நாடாளு மன்ற கூட்டத்தில் ஏற்பட்ட அமளிக்குப் பிறகு சுமார் 150 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருப்பது அர சுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான மோதலின் சமீபத்திய உதாரணம்.

காங்கிரஸின் முன்னாள் தேசிய செய் தித் தொடர்பா ளர் சஞ்சய் ஜா கூறுகை யில், அடுத்த தேர்தல் முடிவுகள் எதிர்க் கட்சிகளுக்கு ‘செய் அல்லது செத்து மடி’ என்ற நிலை எனத் தெரிவித்தார்.

### பணம்தான் நோக்கமா?

நிபுணர்களின் கூற்றுப்படி, இந்தப் பிரசாரத்தின் நோக்கம், பணம் சேகரிப் பதைத் தவிர, கட்சியில் தங்க ளுக்கும் பங்கு இருப்பதாக ஆதரவாளர்களை உணரவைப்

(16ம் பக்கம் பார்க்க)

கு.கணேசன்

# 2023 கற்றதும் பெற்றதும்; நவீன மருத்துவம் நகரும் தடங்கள்!

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு உலக அளவில் மருத்துவத் துறையில் தடாலடி மாற்றங்களை அதிகம் காண முடிகிறது. 2023இல் இவை இன்னும் வேகமெடுத்துள்ளன. புத்தம் புதிய நோய்க்கணிப்பு முறைகளும், நவீன மருத்துவ வசதிகளும் நிறையப் புகுந்துள்ளன. இவற்றின் பலனாக, பொதுவான நோய்களுக்கு மட்டுமல்லாமல், பல அரிய வகை நோய்களுக்கும் நோய்க்கணிப்புக் காலம் குறைகிறது. சிகிச்சைகள் எளிதாகின்றன.

**மகத்துவம் பெறும் மரபணு சிகிச்சைகள்:**

2023இல் நவீன மருத்துவம் நகர்ந்துள்ள முக்கியமான தடம் மரபணு சிகிச்சை தொடர்பானது. மரபணுப் பிறழ்வுகள், தன்னுடல் தாக்குதல், வளர்சிதை மாற்றம், உறுப்புச் சிதைவு போன்றவற்றின் கலவையாகப் பல அரிய நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்குத் தீர்வு காண்பதில் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. மரபணு நோய்களைப் பொறுத்தவரை, டி.என்.ஏ. மரபுச் சங்கிலியில் பிழையுள்ள அல்லது பிறழ்வான மரபணுவை அகற்றியோ, மாற்றியோ சிகிச்சை அளிப்பதுதான் அடிப்படைக் கோட்பாடு. இதை 'மரபணுத் திருத்தம்' என்பர். இதற்கு 'க்ரிஸ்பர்' (CRISPR - Clustered regularly interspaced short palindromic repeats) தொழில்நுட்பம் உதவுகிறது.

செயற்கையாகத் தயாரிக்கப்படும் ஆர்.என்.ஏ-க்களையும் பாக்டீரியாக்களில் உற்பத்தியாகும் Cas9 நொதிகளையும் பயன்படுத்திப் பிழைகளைத் திருத்துவது இதன் செயல்முறை. வீட்டில் ஒழுகும் தண்ணீர்க் குழாயைப் பழுது பார்ப்பவருக்கு நாம் அடையாளம் காட்டுவதைப் போல, திருத்தம் தேவைப்படும் பிழையுள்ள மரபணுச் சங்கிலியை Cas9 நொதிகளுக்கு ஆர்.என்.ஏ-க்கள் அடையாளம் காட்டுகின்றன. பழுது பார்ப்பவர் பசையைப் பூசி ஒழுகும் குழாயை அடைப்பார் அல்லது குழாயை மாற்றுவார். அதைப் போல, பிழையுள்ள மரபணுவை அந்த நொதிகள் அகற்றுகின்றன அல்லது மாற்றுகின்றன. இந்தச் செயல்முறையில் இதுவரை 'அடிப்படைத் திருத்தம்' என்னும் தொழில்நுட்பம் பின்பற்றப்பட்டது.

டி.என்.ஏ. என்பது இரட்டைவடச் சங்கிலி போன்றது. அடிப்படைத் திருத்தத்தில் டி.என்.ஏ.வின் இரண்டு வடங்களிலும் திருத்தம் உண்டானது. சமயங்களில் இது தேவைப்படுவதில்லை. ஒற்றை வடத்தில் மட்டும் திருத்தம் இருந்தால் போதும் என்னும் நிலையில், இம்மாதிரியான திருத்தத்தால், பயனாளிக்கு விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டன.

இந்தக் குறையைப் போக்கும் விதமாக இப்போது புகுந்துள்ளது 'முதன்மைத் திருத்தம்' என்னும் நவீன முறை. இது பிழையுள்ள ஒற்றை வடத்தை மட்டும் திருத்துகிறது. இது, குழாயை மாற்றாமல் ஒழுகும் பகுதியை மட்டும் சரிசெய்வதற்கு ஒப்பானது.

**இது எப்படிச் சாத்தியப்படுகிறது?**

ஒழுகும் தண்ணீர்க் குழாயைக் காட்டுவதற்குப் பதிலாக, குழாயில் ஒழுகும் இடத்தையே கைப்பிடித்துக் காட்டுவதைப் போல, முதன்மைத் திருத்தத்தில் பயன்படுத்தப்படும் ஆர்.என்.ஏ.க்கள், பிழையுள்ள மரபணுவை மிகத் துல்லியமாக அடையாளம் காட்டுகின்றன. இதன் பலனாக, மரபணுப் பிழையை மிக நுட்பமாகத் திருத்த முடிகிறது. நோயை முழுமையாகத் தீர்ப்பது சாத்தியமாகிறது. தலசீமியா (Thalassemia), அரிவாள் அணு நோய் (Sickle Cell Disease), தசை அழிவு (Duchenne Muscular Dystrophy), பரம்பரைத் தள்ளாட்டம் (Inherited Ataxia) போன்ற அரிய நோய்களுக்கு 'முதன்மைத் திருத்தம்' மூலம் நல்ல தீர்வு காண முடிகிறது.

**புற்றுநோய்க்குப் புதிய வெடி:**

கொரோனா காலத்தில், தடுப்பூசித் தத்துவத்தில் புதுமையைப் புகுத்தியது எம்.ஆர்.என்.ஏ தொழில்நுட்பம். மிக விரைவாகவும் எளிதாகவும் குறைந்த செலவிலும் கொரோனா தடுப்பூசியைக் கண்டறிவதற்கு இந்தத் தொழில்நுட்பம் உதவியது. மரபணு சார்ந்த இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, விடை காண இயலாத நோய்களுக்குப் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க முனைந்துள்ளனர் அறிவியலாளர்கள். குறிப்பாக, புற்றுநோய்களைக் குணப்படுத்த எம்.ஆர்.என்.ஏ. உதவுகிறது. ஒரு தடுப்பூசி வழியாக எம்.ஆர்.என்.ஏ.க்களைச் செலுத்தும்போது, உடலில் உள்ள இயல்பான செல்களை அவை தூண்டி, புற்றுநோய்க்கு எதிராகப் போராடும் எதிரணுக்கள் (Antibodies) உடலுக்குள் உற்பத்தியாக உதவுகின்றன. இதன் பலனால், புற்று நோய் காலியாகிறது.

**மேம்பட்டுவரும் சிசுப் பரிசோதனைகள்:**

கருவில் வளரும் சிசுவுக்குப் பிறவியிலேயே நோய் வர வாய்ப்புள்ளதா என்பதைக் கணிக்க 'பனிக்குட நீர் பரிசோதனை' (Amniocentesis), 'கோரியானிக் வில்லஸ் சாம்ப்ளிங்' (Chorionic villus sampling) போன்ற பரிசோதனைகளைத் தற்போது பரிந்துரைக்கின்றனர். இவற்றை மேற்கொள்ளும்போது சிசுவுக்குப் பாதிப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு. இந்தக் குறையைப் போக்க வந்துள்ளது, Non-Invasive Prenatal DNA Testing (NIPT) தொழில்நுட்பம். அதாவது, தாயின் ரத்தத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் சிசுவின் செல்களைப் பிரித்து, அதன் மரபணுக்களை ஆய்வுசெய்யும் ரத்தப் பரிசோதனை முறை இது. கருவில் வளரும் சிசுவுக்கு இதனால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படுவது இல்லை என்பது பெரிய ஆறுதல்.

**புற்றுநோய்க் கணிப்பில் புதுமை:**

புற்றுநோய்களை முன்கூட்டியே கணிக்க, பயனாளியின் ரத்தத்தில் காணப்படும் உயிரிக் குறிப்போன்களை தற்போது பயன்படுத்துகின்றனர் அல்லது மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். இவற்றைவிட எளிதாக, ஆரம்ப நிலையிலேயே பலதரப்பட்ட புற்று நோய்களைக் கணிக்க முடியும் என்பதை 'Proximity ligation assays – PLA' எனும் புதிய தொழில்நுட்பம் உறுதிசெய்துள்ளது. எந்தவொரு புற்றுநோய் தொடங்கினாலும் முதலில் செல்களின் மேற்பரப்பில் உள்ள புரதங்களின் மீதுதான் அது வினைபுரிகிறது. அப்போது அதற்கு எதிரான புரதங்கள் அங்கு தோன்றுகின்றன.

இவற்றைக் கணிப்பதன் மூலம் புற்று நோய் வாய்ப்பையும் கணிக்க முடியும் என்பது இப்போது புகுந்துள்ள நவீன நோய்க்கணிப்பு முறை. ஒரு செடியின் நோயைத் தெரிந்துகொள்ள அதன் வேரைக் கிளற வேண்டாம் இலையைப் பார்த்தாலே போதும். அதுபோலப் புற்றுநோயைக் கணிக்க மரபணுவைப் பார்க்க வேண்டாம் புற்றுசெல்லின் புரதத்தைப் பார்த்தாலே போதும் என்று கற்றுத்தந்துள்ள புதிய பாடம் இது.


**நம்பிக்கையூட்டும் நரம்பு உருப்படங்கள்:**

இதுவரை மனநோய்களைக் கணிப்பதற்கு முன்னுரிமை கொடுத்துவந்த EEG, PET, MRI ஸ்கேன் உள்ளிட்ட நரம்பு உருப்படங்கள், இப்போது ஒருபடி முன்னேறி, சமூகத்தின் தாக்கம், தனிநபர் மனநிலை, மிகுந்த அழுத்தமான நேரங்களில் முடிவெடுத்தல் போன்ற எண்ணம்-செயல்-நடத்தை சார்ந்தவை மூளையில் ஏற்படுத்தும் வேதிமாற்றங்களைக் கணிக்கவும் உதவுகின்றன. முக்கியமாக, Functional MRI (fMRI) உருப்படங்கள் இவற்றில் முன்னிலை வகிக்கின்றன. தற்கொலை எண்ணங்களை முன்கூட்டியே அறிந்து தவிர்க்க இந்தத் தொழில்நுட்பம் பயன்படக்கூடும் என்னும் நம்பிக்கையை விதைத்துள்ளது.


**மாற்றங்களை ஏற்படுத்தும் செயற்கை நுண்ணறிவு:**

மருத்துவத் துறையில் நோய்த்தன்மை அறிதல், துல்லியமான நோய்க்கணிப்பு, மருந்து தயாரிப்பு எனப் பலவற்றிலும் புகுந்து புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம். 'நேச்சர்', 'சயின்ஸ்', 'நியூ இங்கிலாந்து ஜர்னல் ஆஃப் மெடிசின்' போன்ற பிரபல மருத்துவ இதழ்களில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை சமீபத்தில் அதிகரித்துவருவதே இதற்குச் சாட்சி. இந்த ஆண்டில் சாட்ஜிபிடி, ஜெமினி, கிளாடு போன்ற ஏ.ஐ. தொழில்நுட்பச் செயலிகளும் 'Crowdsourcing' எனும் நோய்க்கணிப்பு முறையும் மருத்துவத் துறையை அடுத்த நவீனத்துக்கு நகர்த்தியிருக்கின்றன.

இவற்றில் போலிகள் உருவாகவும் சாத்தியங்கள் உண்டு என்பதால், உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு தெரியாமல் மக்கள் திணறக்கூடும். மருத்துவர்களுக்கும் இவை சவால்கள் விடும். இந்தப் பிரச்சனையை எதிர்கொள்ள, இவற்றின் பயன்பாட்டுக்கான சரியான நெறிமுறைகளை வல்லுநர்கள் வகுத்து மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும். சமூகம் பயன்படுத்தும் இத்தகைய தளங்களை அரசு முறைப்படி கண்காணிக்கவும் வேண்டும். காரணம், மருத்துவத் துறையானது மனித உயிர் தொடர்பானது.





# ரூ.6000 கோடி சொத்து மதிப்புள்ள பாஜகவை...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பதாகும் என்கின்றனர். இந் தப் பிரசாரத்தில் எவ்வளவு பேரை இணைக்க முடியும் என்பதும் காங்கிரசுக்கு சவாலாக இருக்கும்.

“பாரதிய ஜனதா கட்சி அமலாக்க இயக்குநரகத்தை பயன்படுத்துவது நிச்சயமாக ஒரு சவாலாக உள்ளது. இருப்பினும் எங்கள் பொருளாதார நிலை மோசமாக இல்லை,” என அஜய் மக்கான் கூறுகிறார்.

அரசு நிறுவனங்களை மத்திய அரசு தவறாகப் பயன்படுத்துவதாக எதிர்க்கட் சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின் றன. இந்தக் குற்றச்சாட்டுகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

இந்தப் பிரசாரத்தின் மூலம் காங்கிரஸ் எவ்வளவு பணம் திரட்ட விரும்புகிறது என்ற கேள்விக்கு, “இதற்கு இலக்கு எது வும் நிர்ணயிக்கப்படவில்லை. தற்போது 80 சதவீதத்திற்கும் அதிகமான பணம் யூ.பி.ஐ மூலம் வருகிறது. பிரசாரத்தின் மூலம் சேகரிக்கப்படும் பணத்தில் 50 சதவீதத்தை நிரந்தர வைப்புத் தொகையாக வைப்போம்.

இதன் மூலம் கிடைக்கும் வட்டி, கட்சிப் பணிக்கு செலவிடப்படும். மீதமுள்ள பணம் மாநில காங்கிரஸ் கமிட்டிகளுக்கு வழங்கப்படும். ஆனால் அதுவும் பணமாக வழங்கப்படாது,” என அஜய் மக்கான் கூறுகிறார்.

நாக்பூரில் நடைபெற உள்ள காங்கிரஸ் பேரணியில் அனைத்து இடங்களிலும் கியூ.ஆர் கோட் வைத்து மக்கள் நன்கொடை அளிக்கும் திட்டம் உள்ளது.

“கூட்டு நிதி மூலம் தேர்தலை நடத்துவது பற்றி யாரும் சிந்திக்க முடியாது. அது சாத்தியமில்லை. எங்களுக்கு இதைத் தவிர ஆதாரங்கள் தேவைப்படும்,” என அஜய் மக்கான் கூறுகிறார். ஆயிரக்கணக்கில் இணைய தாக்குதல்கள் நடந்துள்ளதாகவும், தரவுகளைத் திருடுவதுதான் பல தாக்குதல்களின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

“ஆனால், இதில் ஒரு தாக்குதல்கூட வெற்றிபெற நாங்கள் அனுமதிக்கவில்லை, எங்கள் வலைதளம் ஒரு நிமிடம்கூட மெதுவாக இல்லை. நிமிடத்திற்கு 5,000 பரிவர்த்தனைகள் செய்யும் அளவில் இதன் திறன் உள்ளது,” என அவர் கூறினார்.

**பணம் திரட்ட போட்டி**

தேர்தல் நெருங்கி வரும் நேரங்களில் தேர்தல் பத்திரங்கள் குறித்த விவாதங்கள் எழுகின்றன. தேர்தல் பத்திரங்களை எந்தவொரு குடிமகனும் அல்லது நிறுவனமும் பாரத ஸ்டேட் வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் இருந்து வாங்கி, அரசியல் கட்சிக்கு அநாமதேயமாக நன்கொடை அளிக்கலாம்.

இந்தத் திட்டத்தைத் தொடங்கும்போது, தேர்தல் பத்திரங்கள் நாட்டில் அரசியல் நிதியளிப்பு முறையைத் தூய்மைப்படுத்தும் என்று இந்திய அரசு கூறியது.

ஆனால், கடந்த ஆண்டுகளில், தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிப்பவர்களின் அடையாளம் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டு வருகிறது. எனவே இது கறுப்புப் பணப் புழக்கத்தை ஊக்குவிக்கும் எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தைச் சேர்ந்த திரிலோச்சன் சாஸ்திரி கூறுகையில், “உலகிலுள்ள எந்த ஜனநாயகத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள், ஒவ்வொரு பைசா குறித்தும் வெளிப்படையான தகவல்கள் கிடைக்கின்றன. அரசியல் கட்சிகளுக்கு யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியும். ஆனால் இந்தியாவில் அது இல்லை,” என்றார்.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் அறிக்கையின்படி, ஆளும் பாஜக 2016-17 மற்றும் 2021-22க்கு இடையில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட பணத்தில் மிகப் பெரிய பங்கைப் பெற்றது.

**மக்களிடையே காங்கிரஸின் செல்வாக்கு**

“ஹிந்துஸ்தான் டைம்ஸின்’ அரசியல் ஆசிரியர் வினோத் ஷர்மா கூறுகையில், ‘காங்கிரஸ் மக்களிடம் தனது செய்தியை வெளிப்படுத்தி வருகிறது. கட்சிக்கு எவ்வளவு வரவேற்பு கிடைக்கும், எத்தனை பேர் சேருவார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறது,” என்று கூறுகிறார்.

“இன்று, எந்தத் தொழிலதிபரும் எதிர்க்கட்சிகளுக்குப் பணம் கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில் அவர்களுக்குப் பயம் இருக்கிறது,” என்றார்.

“அவர்கள் எதிர்க்கட்சிகளுக்கு வெளிப்படையாகப் பணம் கொடுக்க பயப்படுகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஏனெனில் ஆட்சியில் இருக்கும் கட்சி தங்கள் மீது கோபப்படும் என்று தொழிலதிபர்கள் பயப்படுகிறார்கள்,” என்கிறார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பி.ஹெச்.டி படிக்கும் ஆராத்யா சேத்தியாவின் கூற்றுப்படி, தேர்தலில் செலவழிக்கும் தொகை பெரும்பாலும் பண வடிவத்திலேயே வருவதாகக் கூறுகிறார்.

அவர் கூறும்போது, “20,000 ரூபாய்க்கு மேல் நன்கொடை என்றால் தெரிவிக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. ஆனால், ஒருவர் ரூ.20,000 அல்லது அதற்கும் குறைவாக எத்தனை முறை நன்கொடை அளிக்கலாம் என்று கூறப்படவில்லை,” என்றார்.

மேலும்,”தேசிய கட்சிகள் உட்பட பெரும்பாலான கட்சிகள் இந்தத் தகவலைத் தருவதில்லை. தங்களுக்கு வரும் நன்கொடை ரூ.20,000க்கும் குறைவு என்று வாதிடுகின்றனர்,” என்றார் அவர்.

**காந்தியின் பிரசாரம்**

சுதந்திரத்திற்கு முன் ஒத்துழையாமை இயக்கத்திற்காக 1921ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மகாத்மா காந்தியின் வரலாற்றுச் சிறப்புமிக்க திலக் ஸ்வராஜ் நிதித்திட்டம் மூலமாக இந்தப் பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டதாக காங்கிரஸ் கூறுகிறது.

அரவிந்த் கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியும் தனது கட்சி உருவான பிறகு கூட்டுநிதி மூலம் பணம் திரட்டியது. மேற்கத்திய நாடுகளில், கட்சிகள் கூட்டு நிதி மூலம் பணம் சேகரிக்கின்றன. கட்சியில் உறுப்பினர் ஆவதற்கும் கட்டணம் உண்டு.

“ஆம், நாங்கள் பலமாக இருக்கிறோம், பாஜகவுக்கு எதிராக நாங்கள் பெரிய சக்தியாக இருக்கிறோம், அரசியலில் ஈடுபட விரும்பினால் பணம் கொடுங்கள்,” என்ற எண்ணத்துடன் காங்கிரஸ் சென்றால், பணம் வசூலிக்கும் முயற்சிகள் வெற்றியடையும் என்கிறார், ஆராத்யா சேத்தியா.

மேலும், “அரசியலில் பணம் முக்கியம். ஆனால் பணத்தால் மட்டுமே எந்தத் தேர்தலிலும் வெற்றி பெற முடியாது. கட்சியின் செயல்திறனில் கட்சியின் முகம், தலைமை, அமைப்பு மற்றும் சித்தாந்தமும் முக்கியப் பங்கு வகிக்கிறது,” என்றார்.

காங்கிரஸூக்கு பதிலாக 28 எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ‘இந்தியா’ கூட்டணி இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தால், ஒருவேளை சிறப்பான விளைவுகள் ஏற்படலாம். இதனால் எதிர்க்கட்சிகள் முன்னேற முடிந்திருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

